மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 122* ஏப்ரல் 2026

# பரிசுத்த ஆவி: அதின் ஆண்டுகொள்ளும் குணநலன்கள் - பாகம் 2

## வல்லமை

*PT# 366, June 1949, pp. 87-89*



*1.* **ப**ரிசுத்த ஆவியின் ஆண்டுகொள்ளும் குண நலன்களில் இரண்டாவது வல்லமை என்பதாகும். நாம் ஞானத்தைக் குறித்து விரிவாகப் பார்த்ததைப் போல் அல்லாமல் வல்லமையைக் குறித்து சுருக்கமாகக் கருத் தில் கொள்வோம். ஞானமென்பது பரிசுத்தாவியின் மற்ற மூன்று ஆண்டுகொள்ளும் குணநலன்களுக்கு அடிப்படை யாக இருக்கிறது. நாம் ஏற்கனவே பார்த்ததைப் போல், தேவனுடைய வல்லமை என்பது அவருடைய இருத்தலுக் குரிய இயல்பாகிய சர்வ வல்லமையை அர்த்தப்படுத்தக் கூடும், அல்லது அவருடைய குணாம்ச பலத்தை அர்த்தப் படுத்தக் கூடும். நாம் இங்கே வல்லமை என்ற வார்த்தை யைத் தேவனுடைய சர்வ வல்லமையைக் குறிக்க உபயோகிக்காமல், பரிசுத்த ஆவியின் ஆண்டுகொள்ளும் குணநலனாகிய அவருடைய குணாம்ச பலத்தைக் குறிக்க உபயோகிப்போம்.

### வல்லமை என்பதின் வரையறை

*2.* குணாம்ச பலம் என்ற கருத்தில் நாம் வல்லமை என்பதை இவ்வாறு வரையறுக்கக் கூடும். எளிமையான மற்றும் கடுமையான சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் மத்தியில், தொடர்ந்து நன்மை செய்யும் படி, ஒருவன் தன்னை ஆண்டுகொள்வதற்கு உபயோ கிக்கும், குணாம்சத்தின் பலம் வல்லமை ஆகும். இவ்வித குணாம்ச பலத்தை நாம் பல நேரங்களில் சித்தத்தின் வல்லமை *(will power)* என்றழைக்கிறோம்.

*3.* இந்த வரையறையைச் சுருக்கமாக விளக்கு வோம்: குணாம்ச வல்லமை என்பதின் மூலம் நாம் மனம் இருதயம் மற்றும் சித்தம் ஆகியவற்றின் மூலம் அப்பியா சிக்கப்படுகிற வல்லமையை அர்த்தப்படுத்துகிறோம். அது சில நேரங்களில் சரீர பலத்தை உபயோகிப்பதின் மூலமும் அப்பியாசிக்கப்படக் கூடும். அது தீமையான மன இயல்புகள், சிந்தனைகள், நோக்கங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்கு எதிராகவும், நல்ல மன இயல்புகள், சிந்தனைகள், நோக்கங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்கு ஆதரவாகவும் அப்பியாசிக்கப்படும். இந்த அம்சங்களில் சுயத்தை ஆண்டுகொள்வது சம்பந்தமாக அது கிரியை செய்யும். ஒருவனுடைய சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் எளி தாக இருந்தாலும் கடினமாக இருந்தாலும், இன்பமாக இருந்தாலும் இன்பமற்றதாக இருந்தாலும், எதிர் பார்த்த தாக இருந்தாலும் எதிர் பாராததாக இருந்தாலும், அனு கூலமாக இருந்தாலும் பிரதிகூலமாக இருந்தாலும், உற்சாக மூட்டுவதாக இருந்தாலும் அதைரியப்படுத் துவதாக இருந்தாலும், உகந்ததாக இருந்தாலும் ஒவ் வாததாக இருந்தாலும், இடையூறு அற்றதாக இருந்தா லும் இடையூறுகள் நிறைந்ததாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சுயத்தை ஆண்டுகொள்ளும்படி இது

## தூது நிரல்

*1.* பரிசுத்த ஆவி: அதின் ஆண்டுகொள்ளும் குணநலன்கள் - பாகம் 2 -வல்லமை............................*1*
*2.* மூன்று அடையாளங்களின் குரல்கள்.........................*5*
*3.* யாவே உங்கள் முன்னே போவார்; இஸ்ரயேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவரா - யிருப்பார்..............................................................*14*
*4.* சங்கீதம் 82:6,7 வசனங்களின் அர்த்தமென்ன?......*17*

கிரியை செய்யும்.

*4.* அது திடசித்தம், தீர்மானமான தன்மை, உறுதியான தன்மை, எளிதில் விட்டுவிடாத தன்மை, நீடித்து உழைக்கும் திறன், மாறாத தன்மை, விடாமுயற்சி, நிலையான தன்மை, விடாப்பிடியான தன்மை, தொடர் செயல்நிலை, மனம் தளராது செயல்படும் தன்மை, முயற்சியைக் கைவிடாத தன்மை ஆகியவைகள் நிறைந்ததாயிருக்கும். அது திடசித்தமின்மை, முடிவு செய்ய முடியாத தன்மை, தீர்மானமின்மை, அடிக்கடி மாறும் தன்மை, உறுதியின்மை, எளிதில் வசப்படுகிற தன்மை, மனம் போல் நடக்கும் தன்மை, ஊசலாடும் தன்மை, தயக்கம், கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் தன்மை, தடுமாறும் தன்மை, வளைந்து கொடுக்கும் தன்மை, மன உறுதியின்மை, விடாமுயற்சியின்மை, முயற்சியைக் கைவிடும் தன்மை ஆகியவற்றிற்கு எதிராகச் செயல்படும்.

## வல்லமையின் உட்கூறுகள்

*5.* *2 பேது.1:6*-ம் வசனத்தில் நாம் காண்பதைப் போல் வல்லமையின் உட்கூறுகள் அல்லது பகுதிகள் சுயகட்டுப்பாடு அல்லது பொறுமை என்பவைகளாகும். சுயகட்டுப்பாடு என்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: எளிதான, இன்பமான, எதிர்பார்த்த, அனுகூலமான, உகந்த, உற்சாகமூட்டும், இடையூறுகள் இல்லாத சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழ், நம்முடைய மன இயல்புகளையும் சிந்தனைகளையும் நோக்கங்களையும் வார்த்தைகளையும் கிரியைகளையும் தீமைக்கு எதிராகவும் நன்மைக்கு ஆதரவாகவும் உறுதியாக ஆண்டு கொள்வதற்கு, நாம் உபயோகிக்கும் குணாம்ச பலம் சுயகட்டுப்பாடாகும்.

*6.* பொறுமை என்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: கடினமான, இன்பமற்ற, எதிர்பாராத, ஒவ்வாத, பிரதிகூலமான, அதைரியப்படுத்தும், இடையூறுகள் நிறைந்த சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் மத்தியில், அவைகளை மகிழ்ச்சியோடு சகித்துக் கொண்டு, நம்முடைய மன இயல்புகள், சிந்தனைகள், நோக்கங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களைத் தீமைக்கு எதிராகவும் நன்மைக்கு ஆதரவாகவும், விடாமுயற்சியோடு ஆண்டுகொள்வதற்கு நாம் உபயோகிக்கும் குணாம்ச பலம் பொறுமையாகும். சுயகட்டுப்பாட்டின் மைய அம்சம் உறுதி (*firmness*) என்பதாகும். பொறுமையின் மைய அம்சம் விடாமுயற்சி (*perseverance*) என்பதாகும்.

*7.* சுயகட்டுப்பாட்டின் பொதுவான வெளிப்பாடுகளில் அதற்குச் சமமான மற்றும் அதற்கு ஒப்புமையுடைய மற்ற வார்த்தைகள் திடசித்தம், தீர்மானமான தன்மை மற்றும் உறுதியான தன்மை என்பவைகளாகும். சுயகட்டுப்பாட்டின் இன்னும் பலமான வெளிப்பாடுகளில் அதற்குச் சமமான மற்றும் அதற்கு ஒப்புமையுடைய மற்ற வார்த்தைகள் எளிதில் விட்டுவிடாத தன்மை, நீடித்து உழைக்கும் திறன், மாறாத தன்மை என்பவைகளாகும். இந்த வார்த்தைகளெல்லாம் பொறுமை என்ற கருத்திலும் அடங்கி இருக்கின்றன. அதற்குக் கூடுதலாகப் பின்வரும் வார்த்தைகளும் பொறுமை என்ற கருத்தில் அடங்கியுள்ளன: விடாமுயற்சி, நிலையான தன்மை, விடாப்பிடியான தன்மை, தொடர் செயல்நிலை, மனம் தளராது செயல்படும் தன்மை, முயற்சியைக் கைவிடாத தன்மை என்பவைகளாகும். சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையில் சில அம்சங்கள் அல்லது பண்புகள் பொதுவாக இருப்பதற்குக் காரணமென்னவென்றால், அவ்விரண்டும் வல்லமை என்ற ஒரே இயல்பின் உட்கூறுகளாக இருக்கின்றன.

*8.* சுயகட்டுப்பாடு என்பதற்கு எதிரிடையான வார்த்தைகள் இவ்வாறாயிருக்கின்றன: திடசித்தமின்மை, முடிவு செய்ய முடியாத தன்மை, தீர்மானமின்மை, அடிக்கடி மாறும் தன்மை, உறுதியின்மை, எளிதில் வசப்படுகிற தன்மை, மனம் போல் நடக்கும் தன்மை, ஊசலாடும் தன்மை, தயக்கம், கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் தன்மை என்பவைகளாகும். இவைகளெல்லாம் பொறுமை என்பதற்கு எதிரிடையான வார்த்தைகளாகவும் இருக்கின்றன. அதற்குக் கூடுதலாகப் பின்வரும் இயல்புகளும் பொறுமைக்கு எதிரிடையானவைகளாக இருக்கின்றன. தடுமாறும் தன்மை, வளைந்து கொடுக்கும் தன்மை, மன உறுதியின்மை, விடாமுயற்சியின்மை, முயற்சியைக் கைவிடும் தன்மை என்பவைகளாகும். சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமைக்கு எதிரிடையான வார்த்தைகள் ஒரே விதமாக இருப்பதற்கு காரணமென்னவென்றால் அவ்விரண்டும் வல்லமை என்ற ஒரே குணநலத்தின் பகுதிகளாக இருக்கின்றன.

*9.* சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை என்பவைகளுக்கு இடையிலுள்ள குறிப்பான வேறுபாடு இவ்வாறாயிருக்கிறது: சுயகட்டுப்பாடு என்பது இடையூறுகள் இல்லாத சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் மத்தியில் நன்மை செய்வதில் வெளிப்படும் உறுதியான தன்மையாகும். பொறுமை என்பது ஒருவனுடைய சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் வருகிற இடையூறுகளை மகிழ்ச்சியோடு சகித்துக் கொண்டு நன்மை செய்வதில் வெளிப்படும் விடாமுயற்சியாகும்.

## வல்லமை எல்லா சூழ்நிலைகளிலும் நன்மை செய்யும்

*10.* ஒரு குணநலமாகிய வல்லமை எல்லா சூழ்நிலைகளிலும் எல்லா நிலைமைகளிலும் கிரியை செய்யும். அதின் இரு உட்கூறுகளாகிய சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை என்பவைகளில் அது சரீர ரீதியாகவும் மனரீதியாகவும் கலை ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் மத ரீதியாகவும் கிரியை செய்யும். இந்த இரு உட்கூறுகளில் அது மனுஷர் செய்யும் எல்லா வகையான செயல்களிலும் கிரியை செய்யும். எடுத்துக்காட்டாகக் கலை, அறிவியல், கல்வி, தொழில், நீதி, அரசாங்கம், அரசியல், வியாபாரம், எழுத்து தொழில், விளம்பரம், யுத்தம், விளையாட்டுகள், மதம், சொற்பொழிவு ஆகியவைகளில் தேர்ச்சி பெறுவதற்கு இவ்விரண்டும் கிரியை செய்யும். மேலும் பரிசுத்த ஆவியானது இந்த எல்லா செயல் எல்லைகளில் அதிகமாகவோ குறைவாகவோ வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அது வாழ்க்கையின் எளிதான அல்லது கடினமான, இன்பமான அல்லது இன்பமற்ற, உகந்த அல்லது ஒவ்வாத, இசைவான அல்லது முரண்பாடான, எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத, அனுகூலமான அல்லது பிரதிகூலமான, உற்சாகமூட்டும் அல்லது அதைரியப்படுத்தும், இடையூறுகள் இல்லாத அல்லது இடையூறுகள் நிறைந்த சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் வெளிப்படுத்தப்படும். வல்லமை நிறைவேற்றும் படிக்கு ஞானம் அதற்குக் கொடுக்கிற திட்டங்களை நிறைவேற்றும். மேலும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உந்தும் சக்தியாக நீதியையும் அன்பையும் உபயோகிக்கும். நீதிக்கும் அன்புக்கும் இணக்கமான செயல்முறைகள் மற்றும்

வழிமுறைகளை மட்டுமே உபயோகிக்கும்படி கவனமாயிருக்கும்.

## வல்லமையின் வேலை

*11.* இவ்வாறாக வல்லமையின் வேலையானது, காரியங்களை நிறைவேற்றும் வேலையாகும். சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமை என்ற அதின் உட்கூறுகளிலிருந்து நாம் இதை எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடும். எளிதான, இன்பமான, உகந்த, எதிர்பார்க்கிற, அனுகூலமான, உற்சாகமூட்டும் மற்றும் இடையூறுகள் இல்லாத சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் ஞானம் உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் சுயகட்டுப்பாடு மட்டுமே போதுமானதாக இருக்கும். ஆனால் சூழ்நிலைகளும் நிலைமைகளும் கடினமாகவும், இன்பமற்றவைகளாகவும், ஒவ்வாதவைகளாகவும், எதிர்பாராதவைகளாகவும், அதைரியப்படுத்துபவைகளாகவும், இடையூறுகள் நிறைந்தவைகளாகவும் மாறும்போது சுயக்கட்டுப்பாடு போதாததாக இருக்கும். ஆனால் இவ்வித சூழ்நிலைகளின் கீழ் சுயகட்டுப்பாடு கிரியை செய்ய நிறுத்தாது. ஆனால் அது வலுவுப்படுத்தப்படுவது தேவையாயிருக்கும். அதற்குத் தேவையான அந்த வலுவை பொறுமை அளிக்கும்.

*12.* அதிக சுமையைக் கொண்டு செல்கிற நீளமான தொடர்வண்டி சமமான நிலப்பகுதியில் செல்லும் போது அதை இயங்க செய்வதற்கு ஒரு நல்ல ஊர்தி இயந்திரம் மட்டுமே போதுமானதாக இருக்கும். ஆனால் செங்குத்தான ஒரு பாதையில் செல்வதற்கு அது போதாது. இன்னும் அதிக வலுவுள்ள மற்றொரு விசேஷமான ஊர்தி இயந்திரம் கூடுதலாகத் தேவைப்படும். அதுபோலவே சாதாரணமான சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழ் நன்மை செய்வதில் ஒருவனை ஆண்டுகொள்வதற்குச் சுயகட்டுப்பாடு போதுமானதாக இருக்கும். ஆனால் சுயக்கட்டுப்பாட்டினால் கையாள முடியாத அளவிற்குச் சூழ்நிலைகளும் நிலைமைகளும் கடினமாகும் போது, அதை வலுப்படுத்துவதற்குப் பொறுமையின் அதிக பலம் அதற்குத் தேவையாயிருக்கும். வல்லமை என்ற குணநலத்தின் இந்த இரண்டு பகுதிகளின் பலம் ஒன்றாக இணையும் போது, கடினமான சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் எதிர்கொண்டு, அவைகளை மேற்கொள்ளக் கூடும்.

*13.* ஞானம் தீட்டும் திட்டங்களை எடுத்து நிறைவேற்றுவதற்குத் தேவையான நோக்கங்களை வல்லமை அளிக்காது என்பதை நாம் வல்லமையின் இயல்பிலிருந்தே எளிதாகக் கண்டுகொள்ளக் கூடும். அதற்குத் தேவையான நோக்கங்கள் நீதியினாலும் அன்பினாலும் அளிக்கப்படும். ஆனால் அதற்குத் தேவையான சித்தத்தின் பலத்தை வல்லமை அளிக்கும். அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான மன ரீதியான திறன்களுக்கும், அதை உந்தும் நோக்கங்களாக நீதியும் அன்பும் அளிக்கும் ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான திறன்களுக்கும் ஆதரவளிப்பதற்குச் சித்தத்தின் வல்லமை அதின் பலத்தைக் கொடுக்கும். மேலும் இந்த திறன்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்படி அவைகளை உந்தி தள்ளும். ஆகையால் நாம் சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையை நீதி மற்றும் அன்பு சார்ந்த நோக்கங்களாகவும் குணநலன்களாகவும் கருதுவதில்லை. ஏனென்றால் அவைகள் அன்பைச் சேர்ந்தவைகளாக அல்லாமல் பலத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கின்றன. ஏனென்றால் பற்றுதல்களுக்கு ஆதரவளித்து, அவைகளின் மூலம் கிரியை செய்யும் பலத்தைச் சுயகட்டுப்பாடும் பொறுமையும் அப்பியாசிக்கும்.

## வல்லமையின் தவறான உபயோகம்

*14.* சுயகட்டுப்பாட்டின் உறுதியையும், பொறுமையின் விடாமுயற்சியையும் உட்கூறுகளாகக் கொண்ட வல்லமை பல நேரங்களில் தவறாக உபயோகிக்கப்படும். அதாவது அது பல நேரங்களில் மட்டு மீறி செயல்படும் அல்லது குறைவாகச் செயல்படும். சுயகட்டுப்பாடு மற்றும் பொறுமையின் உறுதியான தன்மை தவறாகப் பயன்படுத்தப்படும் போது அவைகள் பிடிவாதத்தை உருவாக்கும். உயர்நிலை முதன்மை குணநலன்களினால் கட்டுப்படுத்தப்படாமல், அதாவது ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பு இணைந்து சமச்சீராகச் செயல்படுவதினால் கட்டுப்படுத்தப்படாமல், சுயநலமான மற்றும் சமூக காரியங்களில் சுயகட்டுப்பாட்டின் உறுதியும் பொறுமையின் விடாமுயற்சியும் மட்டு மீறி செயல்படும்போது பிடிவாதம் உருவாகும். ஒரு நீதிமன்ற குழுவின் பன்னிரண்டு உறுப்பினர்களில் பதினொரு பேர் ஏன் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளாத ஒரு உறுப்பினர் இவ்வித பிடிவாதத்தை அப்பியாசிக்கிறான். மனுஷரின் பிடிவாதத்தின் இணையற்ற எடுத்துக்காட்டானது கி.பி.*1378 - 1417* வரையுள்ள காலத்தில் நிகழ்ந்த போப்பு மார்க்கத்தின் பெரிய பிளவில் எதிர் கட்சிகளிலுள்ள போப்புகள் வெளிப்படுத்தின பிடிவாதமாகும். ஆனால் பிடிவாதத்தின் ஈடற்ற உச்சநிலையான எடுத்துக்காட்டு சாத்தானாக இருக்கிறான். நாம் மற்றவர்களுக்கு இடங் கொடுக்கக் கூடாது என்று தேவ வார்த்தையும் ஆவியும் நம்மைத் தடுக்கும் போது, நம்முடைய உறுதியும் பொறுமையும் மற்றவர்களுக்கு இடங் கொடாதபோது அது பிடிவாதம் அல்ல. ஆனால் நாம் மற்றவர்களுக்கு இடங்கொடுக்க வேண்டுமென்று தேவ வார்த்தையும் ஆவியும் குறிப்பிடும்போது, ஏதேனுமொரு பாவமான, தப்பறையான, சுயநலமான அல்லது உலகத்தனமான காரணத்திற்காக மற்றவர்களுக்கு இடங் கொடாமலிருப்பது பிடிவாதமாகும்.

*15.* சுயகட்டுப்பாட்டின் உறுதிக்கும் பொறுமையின் விடாமுயற்சிக்கும் எதிரிடையான இயல்பு அடிக்கடி மாறும் தன்மை (*fickleness*) என்பதாகும். இந்த தவறான இயல்புடையவர்கள் வல்லமையின் உறுதிக்கும் விடாமுயற்சிக்கும் இடையூறாக இருப்பார்கள். அவர்கள் எப்போதுமே தங்களுடைய போக்கையும், திட்டங்களையும் வேலைகளையும் ஏற்பாடுகளையும் மாற்றிக் கொண்டே இருப்பார்கள. அவர்கள் எல்லா தொழில்களிலும் ஈடுபடுவார்கள், ஆனால் எதிலும் தேர்ச்சியடைய மாட்டார்கள் (பல மரங்கண்ட தச்சன் ஒரு மரத்தையும் வெட்டான்). தொடங்கப்பட்ட ஒரு வேலையைச் செய்து முடிக்க நாம் அவர்களைச் சார்ந்திருக்க முடியாது. அவர்கள் மற்றவர்களுக்குப் பெரிய சோதனையாக இருப்பார்கள். எந்த காரியத்தையும் முடிவு பரியந்தம் செய்து முடிக்க மாட்டார்கள். மேலும் தங்கள் வாழ்க்கையில் தோல்வியடைவது மட்டுமல்ல மற்றவர்களுக்கும் இழப்பையும் பிரச்சனையையும் உண்டு பண்ணுவார்கள்.

*16.* சுயகட்டுப்பாட்டின் உறுதியின் வல்லமையின் மற்றொரு தவறான உபயோகம் திடசித்தமின்மை (*irresoluteness*) என்பதாகும். இந்த தவறான இயல்புடையவர்கள் எதைக் குறித்தும் தீர்மானம் செய்ய இயலாதவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு திட்டத்தையும்

மறுப்பதற்கு ஆயிரம் காரணங்களைக் காண்பார்கள். எந்த ஒரு திட்டத்திற்கும் ஆதரவாகக் கிட்டத்தட்ட எதையும் காண மாட்டார்கள். நீண்ட காலத்திற்கு முன்பே தீர்மானம் செய்யப்பட்டிருக்க வேண்டிய காரியங்களை அவர்கள் தொடர்ந்து விவாதித்துக் கொண்டே இருப்பார்கள். ஒரு காரியத்தை நீண்ட காலத்திற்கு விவாதித்த பிறகு அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருந்தாலும், பல நேரங்களில் அதை மறுபடியும் ஆராய்ந்து, அதற்கு எதிரிடையாகச் செய்ய தீர்மானிப்பார்கள். அல்லது தாங்கள் எடுத்த முடிவைச் செயல்படுத்த தயங்குவதால் அதை நிறை வேற்ற தவறுவார்கள். அவர்கள் செய்யும் தீர்மானங் களுக்குப் பொதுவாக எவ்வித அடிப்படை கொள்கையும் இல்லாதவர்களாக இருப்பார்கள்.

*17.* அளவு மீறிய நிலையான தன்மை *(overdoing continuity)* என்பதும் பொறுமை என்ற உட்கூறில் வல்ல மையைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். சிலரிடத்தில் இந்த நிலையான தன்மை சமச்சீராக அபிவிருத்தி செய்யப் படாததால், அவர்கள் செய்ய முயலுகிற எல்லா காரியங் களிலும் மித மிஞ்சி செயல்படுவார்கள். ஒரு பிரசங்கத் திலும் ஒரு கலந்துரையாடலிலும் எப்போது நிறுத்த வேண்டுமென்பதை அறியாதிருப்பார்கள். ஒரு வேலை செய்வதை எப்பொழுது நிறுத்த வேண்டுமென்பதை அறியாதிருப்பார்கள். அவர்கள் எழுத்தாளர்களாக இருந் தால் அளவுக்கு மீறி எழுதுவார்கள். பேச்சாளர்களாக இருந்தால் நீண்ட நேரத்திற்குப் பேசுவார்கள். எடுத்துக் காட்டாகப் பேசில் நகரத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் *(Council of Basel கி.பி. 1431-1449)* பங்கு கொண்ட பேச்சாளர்களில் சிலர் எட்டு நாட்களுக்கும் சிலர் பதிமூன்று நாட்களுக்கும் தொடர்ந்து பேசினார்கள். அதற்கிடையில் சோர்வை அகற்றுவதற்குச் சிறுநேரத் திற்கு மட்டுமே பேச்சை நிறுத்தினார்கள்! பதினெட்டு வருடங்களுக்கு நீடித்த இந்தக் கூட்டம் அளவுக்கு மீறிய பொறுமை மற்றும் விடாமுயற்சியின் மற்றொரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. நாம் இவ்வாறு வல்லமையைத் தவறாக உபயோகிக்காமலிருப்பது நலமானதாகும்.

## வல்லமையின் அளவுகள்

*18.* தேவனுடைய ஜனங்களின் மத்தியில் வல்ல மையானது வெவ்வேறான அளவுகளில் வெளிப்படும். சிலர் பலமான சித்தமுடையவர்களாக இருப்பார்கள், மற்றவர்களோ மிகவும் பெலவீனமான சித்தமுடைய வர்களாக இருப்பார்கள். இந்த இரு எல்லைகளுக் கிடையில் வெவ்வேறான அளவுகளில் வல்லமை வெளிப் படுத்தப்படும். சிலர் தொடங்கும் போது பொறுமையும் விடாமுயற்சியும் இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆனால் அதைத் தொடர்ந்து அப்பியாசிப்பதின் மூலம் மிக உயர்ந்த அளவான விடாமுயற்சியை அடைவார்கள். நம்முடைய பாஸ்டர் ரஸல் இதற்கொரு எடுத்துக் காட்டாக இருக்கிறார். அவருடைய வாழ்நாட்கள் முழு வதும் அவர் பொறுமையை அப்பியாசித்து வெகு சிலர் மட்டுமே அடைந்தளவிற்கு இந்தப் பண்பை அபிவிருத்தி செய்து கொண்டார்.

*19.* சிலர் இதற்கெதிரிடையான விதத்தில் சமச்சீர் படுத்தப்படாத வல்லமையுடையவர்களாக இருப்பார்கள். அது அவர்களில் மிதமிஞ்சிய அளவிற்கு இருப்பதால் வல்லமையின் தவறாகப் பயன்படுத்தப்பட்ட உறுதி யினாலும் நிலையான தன்மையினாலும் பிடிவாதமாக வெளிப்படும். தேவனுடைய ஜனங்களிடத்தில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிற வல்லமையின் அளவிற்கு இந்த பிடிவாதத்தைக் குறைப்பதற்கும் அவர் கள் வாழ்நாள் முழுவதும் பிரயாசப்பட வேண்டிய தாயிருக்கும். மிதமிஞ்சிய வல்லமையின் இந்த இரு எல்லைகளையும் தவிர்த்து, சமச்சீராகவும் சரியாகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட சித்தத்தின் வல்லமையின் நடுநிலையை அடைவதற்குக் கவனமான பிரயாசம் தேவையாயிருக்கும்.

*20.* விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களிடத்தில் கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்து போதகராகவும், நியாய மாக்குபவராகவும், பரிசுத்தமாக்குபவராகவும், விடுதலை யாக்குபவராகவும் அவருடைய அலுவல்களைச் செய லாற்றி அவர்களுக்கு அளிக்கிற தெய்வீக ஆவி, வார்த்தை மற்றும் பரிபாலனங்களுக்கு அவர்கள் உண்மைத்துவத் துடன் கீழ்ப்படியும் போது, இந்த நடுநிலையான வல்லமையை அடைவார்கள். நாமும் வல்லமையின் இந்த இரு எல்லைகளில் ஏதேனுமொன்றில் இருக்கக் கூடும். ஆனால் அதில் சரியான நடுநிலைக்கு நம்மைக் கொண்டு வருவதற்கு, யெஷுஆ செய்கிற முயற்சிகளில் நாம் அவரோடு விசுவாச உண்மைத்துவத்துடன் ஒத்துழைக்கும் போது, நிச்சயமாக வெற்றியடைவோம்.

*21.* ஆனால் விசுவாச உண்மைத்துவமுள்ள அனைவரும் ஒரே அளவான வல்லமையை அடைவார்கள் என்று எண்ணக்கூடாது. இவர்கள் எல்லோரும் அவனவ னுடைய குணாம்சத்தில் சமச்சீர்படுத்தப்பட்ட வல்ல மையை அடைந்தாலும், அவர்களுக்கு மரபு வழியாக வந்த பண்புகளும் அவர்களுடைய சுற்று சூழ்நிலைகளும் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட விதமும் வெவ்வேறாக இருப்பதால், வெவ்வேறான குணாம்சங்களை அடைவார் கள். ஒரே வகுப்பைச் சேர்ந்த சிலர் அதிக பலமான குணாம்சமுடையவர்களாகவும், சிலர் குறைந்த பலமுள்ள குணாம்சமுடையவர்களாகவும் இருப்பார்கள். இந்தக் காரியத்தில் குணாம்ச மகிமையை அடைவதில் நட்சத் திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கும். ஆகையால் இந்த வாழ்க்கையிலும் ராஜ்யத்திலும் ஒவ்வொரு வனையும் தேவன் வெவ்வேறாக உபயோகிப்பார் என்பதை இது அர்த்தப்படுத்தும். சிலரை அதிக மேன்மை யான காரியங்களுக்காகவும் சிலரைக் குறைந்த மேன்மை யுள்ள காரியங்களுக்காகவும் உபயோகிப்பார். ஆனால் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் தங்கள் இருதயத் தில் பொறாமையின் ஆவிக்கு இடங் கொடுக்க மாட்டார்கள்.

## வல்லமையின் அபிவிருத்தி

*22.* வல்லமையின் அதாவது சித்தத்தின் பலத்தின் குறைவுப்பட்டவர்கள் அதை அபிவிருத்தி செய்து கொள்வது அவசியமானதாகும். இதற்கு விசேஷமாக மூன்று காரியங்கள் உதவும்: (1) சுயகட்டுப்பாட்டின் திட சித்தத்தையும் தீர்மானத்தையும் உறுதியையும், பொறுமை யின் விடாமுயற்சியையும் நம்மில் தூண்டிவிடும் வேதாகம முன் மாதிரிகளையும், சபை மற்றும் உலக வரலாற்றின் முன்மாதிரிகளையும், தேவ வார்த்தையின் போதனை களையும் மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் பற்றிக் கொள்வதாகும், (2) இது சம்பந்தமாகத் தேவன் நமக்குக் கொடுக்கிற பரிபாலனங்களின் மத்தியில் பரிசுத்த ஆவியை உபயோகித்து தேவையான திடசித்தத்தையும், தீர்மானத்தையும், உறுதியையும் விடாமுயற்சியையும் அப்பியாசிப்பதென்பதாகும். இந்த இரண்டு காரியங்

களும் வல்லமையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிலையான தீர்மானத்தை அபிவிருத்தி செய்யும். அதே நேரத்தில் மூன்றாம் காரியமாக *(3)*இவ்வித அபிவிருத்திக்கு எதிரிடையான சத்துருக்களெல்லாம் நம்முடைய செயற்களத்திலிருந்து அகற்றப்படும் படிக்கு அவைகளை நாம் வெறுத்து, தவிர்த்து எதிர்க்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது நம்மில் குறைவுப்பட்டிருந்த வல்லமை நிறைவாக்கப்படும்.

*23.* ஆனால் சித்தத்தின் வல்லமையை அபிவிருத்தி செய்வதற்குப் பிடிவாதத்தையும் மிதமிஞ்சிய விடாமுயற்சியையும் மேற்கொள்வதும் தேவையாயிருக்கும். இதைச் செய்வதற்கு நாம் இந்த தீமைகளுக்கெதிராகப் போராட வேண்டும். வல்லமையின் குறைபாட்டை நிறைவாக்குவதற்கு மேலே கொடுக்கப்பட்ட மூன்று செயல்முறைகளை இந்த இரண்டு தவறுகளுக்கெதிராக நாம் உபயோகிக்கும் போது, அவைகளின் மிதமிஞ்சிய செயல்பாட்டை அது தடுக்கும். மேலும் தகுந்த அளவான உறுதியையும் விடாமுயற்சியையும் அடையும்படி அவைகளைக் குறைக்கும். இவ்வாறாக வல்லமை சரியாக அபிவிருத்தி செய்யப்படும்.

### வல்லமை செயல்படாதபடி அதைக் கட்டுப்படுத்தி அடக்குவது

*24.* வல்லமையைக் கட்டுப்படுத்துவதைக் குறித்தும், அடக்குவதைக் குறித்தும் சில கருத்துக்களை பார்ப்போம். வல்லமையை உபயோகிக்காததினாலும் அப்பியாசிக்காததினாலும் அது கட்டுப்படுத்தப்படும். நம்முடைய சரீரத்தின் தசைகளை உபயோகிக்காததால் அவைகள் பெலவீனமானவைகளாகவும் உறுதியில்லாதவைகளாகவும் இருப்பதைப்போல், நம்முடைய குணநலன்களை அப்பியாசிக்காததால் நம்முடைய குணாம்சம் பெலவீனமாகவும் உறுதியற்றதாகவும் இருக்கும். இவ்வாறாக ஒரு குணநலனாகிய வல்லமையை நாம் உபயோகிக்கவில்லையென்றால் அது நலிந்து போகும். மேலும் பல நேரங்களில் பாவம், தப்பறை, சுயநலம், உலகத்தனம் ஆகியவற்றிலும், இந்தத் தீமைகள் ஒவ்வொன்றின் பல்வேறு வடிவங்களிலும் நாம் நம்முடைய சித்தத்தை அப்பியாசிக்கும்போது ஒரு குணநலனாகிய வல்லமையை இழப்போம். ஏனென்றால் இந்த தீமைகள் சம்பந்தமாகச் சித்தத்தின் பலத்தை அப்பியாசிக்கும் போது, ஒரு குணநலனாக அது உபயோகிக்கப்படாமலிருக்கும். அல்லது தவறாக உபயோகிக்கப்படு வதால் ஒரு குணநலனாக அது தீட்டுப்படும். இவ்வாறாக அது வலுவிழந்து கட்டுப்படுத்தப்படும். வல்லமையை இவ்வாறு கட்டுப்படுத்துவது படிப்படியாக அதை அடக்குவதாக மாறும். அதிகமாகவோ குறைவாகவோ இருந்த விருப்பத்துணிவு முழுமையான விருப்பத்துணிவாக மாறும். அவ்வாறு நடக்கும் போது நாம் முற்றிலும் தோல்வியடைவோம்.

### வல்லமையின் அனுகூலங்கள்

*25.* ஒரு குணநலனாகிய வல்லமையை அப்பியாசிக்கும் போது நாம் பல அனுகூலங்களை அடைவோம். நாம் அந்த குணநலன் உடையவர்களாக இருப்பதே ஒரு அனுகூலமாகும். ஏனென்றால் சுயகட்டுப்பாடு என்ற குண இயல்பில் நாம் சித்தத்தின் பலமுடையவர்களாக இருக்கும்போது சாதாரண சூழ்நிலைகளின் மத்தியில் நம்முடைய நலனுக்காகவும் மற்றவர்களுடைய நலனுக்காகவும் நம்மை ஆண்டுகொள்ளக்கூடியவர்களாக நம்மைப் பலப்படுத்தும். நாம் செய்யும் காரியங்களில் வெற்றி அடைய இது நமக்கு உதவும். மேலும் மற்ற நல்ல பண்புகளிலும் இது நம்மை பலப்படுத்தும். ஏனென்றால் ஞானம் நீதி மற்றும் அன்பு என்ற குணநலன்கள் அவைகளுடைய ஆவியிலும், அவைகள் செயல்படும் விதத்திலும் முறைகளிலும் இன்னும் உறுதியாகச் செயல்பட சுயகட்டுப்பாடு உதவும். அதுபோலவே நம்முடைய தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களையும், நம்முடைய பற்றுதல்கள் எல்லாவற்றையும் பலப்படுத்த சுயகட்டுப்பாடு உதவும். இறுதியாக, ஞானம் திட்டமிட்டு, நீதி மற்றும் அன்பு ஊக்குவிக்கிற திட்டங்களைச் சுயகட்டுப்பாடு வெற்றிகரமாக நிறைவேற்றும்.

*26.* அதுபோலவே பொறுமை மற்றும் விடாமுயற்சி என்ற உட்கூறிலும் வல்லமை நமக்கு மிகவும் அனுகூலமானதாகும். அது முதலாவதாகப் பொறுமைக்கு அனுகூலமாக இருக்கும். பின்பு மற்ற குணாம்ச பண்புகளுக்கும் அனுகூலமாயிருக்கும். ஏனென்றால் கடினமான, இடையூறுகள் நிறைந்த சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் மத்தியில் நாம் சரியாகச் செயல்படும்படி பொறுமை நம்மை நாமே ஆண்டுகொள்ளும்படி செய்யும், இவ்வித கடினமான சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் மத்தியில் ஞானம் தீட்டும் திட்டங்களைப் பொறுமை வெற்றிகரமாக நிறைவேற்றும். இவ்விதமான சூழ்நிலைகளில் நம்முடைய ஞானம் தீட்டும் திட்டங்களில் நம்முடைய நீதியும் அன்பும் சரியான ஆவியிலும் விதத்திலும் முறைகளிலும் செயல்படும்படிக்குப் பொறுமை அவைகள் எல்லாவற்றையும் பலப்படுத்தும். அதுபோலவே நம்முடைய தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்கள் எல்லாவற்றையும், நம்முடைய பற்றுதல்கள் எல்லாவற்றையும் நன்மையில் பலப்படுத்தும். இவ்வாறாக நம்முடைய அனுபவங்களின் எளிதான மற்றும் கடினமான காரியங்கள் எல்லாவற்றிலும் நாம் பெலவீனமடையாதபடிக்கும், தவறு செய்யாத படிக்கும், தோல்வி அடையாதபடிக்கும் வல்லமையின் இரு உட்கூறுகளாகிய சுயகட்டுப்பாட்டிலும் பொறுமையிலும் அது நம்மைக் காக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## மூன்று அடையாளங்களின் குரல்கள்

***R4057: p. 276***

*பாஸ்டர் ரஸல் இந்த சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட போது அவருக்கிருந்த அனுபவத்தைக் குறித்து அவர் சொன்ன காரியங்கள் (கி.பி.1907-ம் வருடம்)*

*1.* மோசேயைக் குறித்தும், இஸ்ரயேலர்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பவராக அவர் இஸ்ரயேலர்களுக்கு முன் இருமுறை வருவதைக் குறித்தும் நான் ஞாயிறு பள்ளிக்குரிய பாடங்களைத் *(Sunday School Lessons)* தயார்செய்துகொண்டிருக்கையில், "இவைகளெல்லாம் … யுகங்களின் முடிவு காலங்களிலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டிருக்கிறது" என்ற உண்மை என் கவனத்திற்கு வந்தது *(1 கொரி.10:11.)* இந்த கண்ணோட்டத்திலிருந்து இந்த காரியத்தைக்



குறித்துச் சிந்திக்கும்போது நான் பின்வரும் காரியங்களை உணர்ந்தேன்: *1)* மோசே இரண்டாம் முறை இஸ்ரயேலர்களுக்கு முன் வரும்போது, தேவன் அவர்களை விடுவிக்கும் காலம் சமீபமாயிருக்கிறது என்று அவர்களுக்கு நிரூபிப்பதற்கு மோசே செய்த மூன்று அடையாளங்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தலில் அவைகளுக்கு இணையான ஏதேனும் மூன்று சான்றுகளை அல்லது சாட்சிகளை அடையாளப்படுத்த வேண்டும், *2)* இந்த சாட்சிகள் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்படும் சாட்சிகளாக இருக்கும்.

*2.* அடையாளத்தில் இந்த சான்றுகள் அல்லது சாட்சிகள் எகிப்தியர்களின் மேல் வந்த வாதைகளுக்கு முன் நிகழ்ந்தன. ஆகையால் நிஜ நிறைவேறுதலிலும், நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகை சம்பந்தமாகவும், அவர் நிறைவேற்ற போகிற பெரிய விடுதலை சம்பந்தமாகவும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்படும் மூன்று சான்றுகள் அல்லது சாட்சிகளும் *1914*-ம் வருடத்தில் உலகத்தின் மேல் வரப்போகிற மகா உபத்திரவ காலத்திற்கு முன் நிகழ வேண்டும்.

*3.* நான் முதலில் குழப்பமடைந்து எனக்குள் இவ்வாறு எண்ணினேன்: “நாம் இப்பொழுது மனுஷ குமாரனுடைய நாட்களில் இருக்கிறோம் என்று வேத வசனங்கள் நமக்குத் தெளிவாகக் காண்பிக்கின்றன. *1879*-ம் வருடத்தில் நம்முடைய பத்திரிக்கையை வெளியிடத் தொடங்கினது முதல், “ஹெரால்ட் ஆஃப் கிறைஸ்ட் பிரசன்ஸ்” (*Herald of Christ’s Presence* - கிறிஸ்துவின் வந்திருத்தலின் பிரகடனம்) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் இந்த மூன்று அடையாளங்கள் எங்கே? அறுவடையின் *40* வருடங்களில் *34* வருடங்கள் ஏற்கனவே கடந்துவிட்டது. இன்னும் *7* வருடங்கள் மீதி இருக்கின்றன. *7* வருடங்களுக்குப் பிறகு நிஜ நிறைவேறுதலான எகிப்தாகிய உலகத்தின் மேல் மகா உபத்திரவம் வருமென்று நாங்கள் உறுதியாக எதிர்பார்க்கிறோம். எல்லா உண்மையான இஸ்ரயேலர்களுக்கும் நிரூபிக்கும்படிக்கு இக்காலத்தில் கொடுக்கப்படுவதாக அடையாளம் போதிக்கிற இந்த சான்றுகள் அல்லது சாட்சிகள் எங்கே?”

*4.* கொஞ்ச காலத்திற்கு நான் அற்புதமான அடையாளங்களை எதிர்பார்த்தேன். ஆனால் இக்காலத்தில் கர்த்தர் செயல்படும் முறை இது அல்ல என்று பின்பு உணர்ந்தேன். ஏனென்றால் நிஜ நிறைவேறுதல் என்பது எப்பொழுதுமே அடையாளத்தை விட உயர்வான மற்றும் மேன்மையான அளவிலிருக்கும். எடுத்துக்காட்டாக, அடையாளமான பஸ்கா ஆட்டுக்குட்டியானது மங்கலாக மட்டுமே, தேவ ஆட்டுக்குட்டியானவரையும், அவருடைய பலியின் மூலம் நிறைவேற்றப்படும் மேன்மையான காரியங்களையும் அடையாளப்படுத்தினது. நாம் “மனுஷ குமாரனுடைய பரூஷியாவின்” காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று உறுதியாக இருப்பதால், இந்த அடையாளங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது இக்காலத்தில் கொடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன என்று முடிவு செய்தேன். இருந்தாலும் அவைகளை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. இந்த விஷயம் கர்த்தருடைய வீட்டாருக்கு இப்போது “ஏற்ற வேளையின் ஆகாரமாக” இருக்கும் என்று உணர்ந்து, இந்த விஷயத்தைப் பற்றிய வெளிச்சத்திற்காக ஆர்வத்துடன் திரும்பத் திரும்பக் கர்த்தரிடம் மன்றாடினேன். அதே நேரத்தில் என்னுடைய வேத ஆராய்வுகளைத் தொடர்ந்து செய்தேன்.

*5.* எந்த வெளிச்சத்தையும் பெற்றுக் கொள்ளாததால், பைபிள் ஹவுஸ் குடும்பத்தாருடன் மாலை உணவில் பங்கு கொள்ளும்போது இந்த விஷயத்தை அவர்களிடம் கூறினேன். இந்த விஷயத்தைக் குறித்து எல்லோரும் ஜெபம் பண்ண வேண்டுமென்றும், இதைக் குறித்து அவர்களிடம் ஏதேனுமொரு ஆலோசனை இருந்தால் தயங்காமல் எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அவர்களிடம் சொன்னேன். இந்த மறைபொருளைப் புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை என்றும், ஞானத்திற்காக நான் முழுமையாகக் கர்த்தரைச் சார்ந்திருக்கிறேன் என்றும் ஒத்துக் கொண்டு, வெளிப்படையாக அறிக்கை பண்ணும் நிலைக்கு வர வேண்டுமென்ற தெய்வீக நோக்கத்திற்கு இது இணக்கமாக இருந்தது. ஏனென்றால் நான் இவ்வாறு அறிக்கை பண்ணின இரண்டு மணி நேரத்துக்குள்ளே இந்த காரியம் முழுவதையும் தெளிவாகவும் குழப்பமில்லாமலும் புரிந்துகொண்டேன். உங்கள் அனைவருக்கும் முன்பாக

## மோசே நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவை அடையாளப்படுத்துகிறார்

*6.* மோசே சில அம்சங்களிலும், சில நடவடிக் கைகளிலும் நம்முடைய கர்த்தரை அடையாளப்படுத்து கிறார் என்று நம்முடைய கர்த்தர் தாமே அறிவிக்கிறார் - “மோசே…என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே” (யோ வா. 5:46). “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை (போதகரை) உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்” (உபா. 18:15) என்று மோசே தாமே அறிவிக்கிறார். பேதுரு அப்போஸ் தலரும் தம்முடைய பிரசங்கத்தில் இந்த அறிக்கையை எடுத்துரைத்து அதை வலியுறுத்துகிறார் (அப். 3:22). ஆனால் மோசே செய்த எல்லா காரியங்களிலும் அவர் கிறிஸ்துவை அடையாளப்படுத்தவில்லை. மேலும் மோசேயின் முழு வாழ்க்கையும் கிறிஸ்துவின் முழு வாழ்க்கையை அடையாளப்படுத்தவில்லை. எடுத்துக் காட்டாக மோசே தேவனுடைய உத்தரவுக்கு எதிரிடை யாக கன்மலையை அடித்ததில், கிறிஸ்துவை அவமானப் படுத்தி, அதின் நிமித்தம் இரண்டாம் மரணத்திற்குள் செல்கிற சீஷர்களை அடையாளப்படுத்துகிறார். இவர் களை அடையாளப்படுத்துவதற்காக மோசே வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாதிருந்தார் (எண். 20:11; உபா. 32:51,52; எபி. 10:29). சில நேரங்களில் மோசே யாவே தேவனையும் அடையாளப்படுத்தினார். ஆனால் நாம் இப்போது இஸ்ர யேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப் பது சம்பந்தமாக அவர்களோடு மோசே செயல்பட்ட விதத்தை ஆர்வமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

*7.* இந்த அடையாளத்தில் மோசே கிறிஸ்து யெஷுஆவை அடையாளப்படுத்துகிறார் என்று நாம் தெளிவாகக் காண்கிறோம். மோசே ஐசுவரியவானாகவும் உயர்ந்த கனமுடைய பிரபுவாகவும் இருந்தார். அவரு டைய காலத்திற்குரிய எல்லா கல்வியிலும் தேர்ச்சி பெற்ற வராயிருந்தார். ஆனால் இஸ்ரயேலர்களின் நிமித்தம் அவைகள் எல்லாவற்றையும் விட்டு விட்டார். இஸ்ர யேலர்கள் அடிமைகளாக இருந்ததால், அவர்களுடைய தலைவராகவும் விடுதலையாளராகவும் இருப்பதற்கு அவரும் அவர்கள் மத்தியில் வந்தார். இது வேதாகமத்தில் நம்முடைய கர்த்தரின் நடத்தையைக் குறித்துக் கொடுக் கப்பட்ட வர்ணனைக்கு எவ்வளவு ஒத்ததாக இருக்கிறது!

*8.*மோசே தமக்குச் சொந்தமான ஜனங்களிடத்திற்கு வந்தபோது அவர்கள் அவரைப் புறக்கணித்தார்கள். அவர் தன் ஜீவனைக் காத்துக் கொள்ள மீதியான் தேசத்திற்குச் சென்றார். அவ்விடத்திலிருந்து அவர் தம்முடைய ஜனத் திடத்திற்கு இரண்டாம் முறை வந்தார். அதுபோலவே கிறிஸ்துவும் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா. 1:11). ஆகையால் அவர் ஒரு தூர தேசமாகிய பரலோகத்திற்குச் சென்றார். இப்போது இரண்டாம் முறை பரலோகத்திலிருந்து வந்திருக்கிறார். மேலும் உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவரையும் பாவம் மற்றும் மரணமென்னும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார்.

*9.* மோசே இரண்டாம் முறை இஸ்ரயேலர் களுக்கு முன் வந்தபோது, முதல் முறை அவர்களிடம் பேசினதைப் போல் நேரடியாக அவர்களிடம் பேச வில்லை. ஆரோன் உனக்கு தீர்க்கதரிசியாக அல்லது வாயாக இருப்பான் என்றும் நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய் என்றும் தேவன் மோசேயிடம் சொல்லி இருந்தார் (யாத். 4:16,30; 7:1). அடையாளத்தில் சொல்லப் பட்ட இந்த காரியம் இக்காலத்தில் உண்மையாயிருக்கிற ஒன்றை அர்த்தப்படுத்துகிறது. கர்த்தராகிய யெஷுஆ முதல் வருகையில் உண்மையான இஸ்ரயேலர்களிடம் நேரடியாகப் பேசினதைப் போல் இப்போது பேசு வதில்லை. மாறாக அவருடைய வாயாக இருக்கிற அவருடைய செயலியக்கியின் மூலம் பேசுகிறார். ஆரோன் இரண்டாம் வருகையின் காலத்தில் கர்த்தரு டைய வாயாக அல்லது செயலியக்கியாக இருந்த ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரை அடையாளப்படுத்துகிறார் என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். அவர் திரைக்கப்பால் மகிமைக்குள் சென்ற அங்கத்தினர்கள் அல்லாமல், மாம்சத்திலிருந்து பலி செய்து கொண்டிருந்த கர்த்த ருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களை அடையாளப் படுத்துகிறார். அடையாளத்தின் பொருள் இவ்வாறா யிருக்கிறது: கர்த்தருடைய வந்திருத்தலைக் குறித்தும், உண்மையான இஸ்ரயேலர்களை விடுவிக்கும் அவரு டைய மகத்துவமான வல்லமையைக் குறித்தும், சாத்தான், பாவம் மற்றும் மரணத்தின் மேல் அவர் அடையப்போகிற இறுதியான வெற்றியைக் குறித்தும் சுவிசேஷ யுக அறு வடை காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த உண்மையான இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சிகள் அல்லது சான்றுகள், பூமியில் வந்திருக்கிற நமது கர்த்த ரால் கொடுக்கப்பட்டாலும், அவைகள் ஆரோனால் அடையாளப்படுத்தப்பட்ட அவருடைய சரீர அங்கத் தினர்களில் (அவருடைய சகோதரர்) மாம்சத்தில் ஓடிக் கொண்டிருப்பவர்களின் மூலம் கொடுக்கப்படும்.

*10.* இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட முத லாம் அடையாளம் அல்லது சாட்சி இவ்வாறாயிருந்தது: ஒரு கோல் தரையிலே போடப்பட்டது அப்போது அது ஒரு சர்ப்பமாயிற்று. ஆரோன் கையை நீட்டி அதன் வாலை பிடித்தபோது அது அவருடைய கையிலே மீண்டும் ஒரு கோலாயிற்று. அது மோசேயின் கோலாக இருந்தது. ஒவ்வொரு செயலிலும் ஆரோன் மோசேயின் பிரதிநிதியாக மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருந்தார் (யாத். 4:30). மாம்ச இஸ்ரயேலர்கள் இந்த அற்புதத்தைக் கண்டார்கள். ஆனால் அதிலிருந்து எந்த போதனையையும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் ஆவிக்குரிய இஸ்ர யேலர்கள் நிஜ நிறைவேறுதலில் அதைவிட பெரிய கோல் இருப்பதையோ, பெரிய சர்ப்பம் இருப்பதையோ எதிர் பார்க்கக் கூடாது. மாறாக இக்காலத்தில் கொடுக்கப் படுகிற நிஜ நிறைவேறுதலான போதனையாக அல்லது சாட்சியாகக், கோல் மற்றும் சர்ப்பம் அர்த்தப்படுத்தும் காரியங்களைப் புரிந்து கொள்ள நாட வேண்டும்.

*11.* கோல் என்பது அதிகாரத்தை அர்த்தப் படுத்தும். எகிப்தின் மேல் வந்த வாதைகள் சம்பந்த மாகவும், இந்த அடையாளங்கள் சம்பந்தமாகவும் மோசேயின் கோல் தெய்வீக அதிகாரத்தை அர்த்தப்படுத் துவதாக உபயோகிக்கப்பட்டது. சர்ப்பம் என்பது பொதுவாகத் தீமையை அடையாளப்படுத்துகிறது. அதா வது பாவம் மற்றும் அதின் எல்லா விளைவுகளையும்

அடையாளப்படுத்துகிறது. இதிலிருந்து ஆவிக்குரிய இஸ்ரயேலானவன் இக்காலத்தில் புரிந்து கொள்ள வேண்டிய காரியம் இவ்வாறாயிருக்கிறது: *(1)* உலகத்திலுள்ள தீமையெல்லாம் தேவன் தம்முடைய கோல் அல்லது அதிகாரத்தை விட்டுவிட்டதின் நேரடியான அல்லது மறைமுகமான விளைவாக இருக்கிறது. *(2) 6000* வருடங்களுக்கு மேலாக நீடித்திருக்கிற இந்த தீமையான சூழ்நிலைகளைத் திரும்பக் கையாளுவது தேவனுடைய நோக்கமாக அல்லது திட்டமாக இருப்பது மட்டுமல்ல அவர் கொடுத்த வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது. *(3)* அவர் இந்த குழப்பத்திலிருந்து ஒழுங்கைக் கொண்டு வந்து, அதிகாரத்தைத் திரும்பத் தம்முடைய கரத்திலே நிலை நாட்டுவார்.


*12.* இந்த செயல்கள் அல்லது அடையாளங்களுக்கு "குரல்கள்" இருப்பதைப் போல் சொல்லப்படுகிறது (யாத். *4:8,9 -KJV* பார்க்கவும் *-will not believe thee, neither hearken to the* <u>*voice of the first sign*</u> *-* <u>முந்தின அடையாளத்தின் குரலை</u> அவர்கள் கேளாமலும், உன்னை நம்பாமலும்). அதாவது இந்த குரல்கள் சாட்சிகளாகக் கொடுக்கப்படுகின்றன. கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலின் காலத்தில் உலகமெங்குமுள்ள தேவனுடைய ஜனங்களுக்கு இந்த சாட்சி அல்லது சான்று கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதா? என்ற கேள்வி எழும்புகிறது. ஆம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால் இந்த உண்மையைத் தேவனுடைய ஜனங்கள் எப்போதுமே அறிந்தவர்களாக அதைப் பிரகடனம் பண்ணினார்களா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். சுவிசேஷ யுக அறுவடை காலத்திற்கு முன் இந்த காரியம் எப்போதாவது இவ்வாறு விளக்கப்பட்டிருந்ததா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். கிறிஸ்தவ விசுவாசத்தின் எல்லா வகுப்புகளிலுள்ள ஜனங்கள் மற்றும் தத்துவ சாஸ்திரிகளின் மத்தியில் இந்த காரியம் இதுவரை ஒரு யூகமாக விவாதிக்கப்பட்டுக் கொண்டு வந்தது. ஆனால் தேவன் உலகத்தில் தீமையை ஏன் அனுமதித்தார் என்ற கேள்விக்குப் பதில் இல்லா திருந்தது.

*13.* நன்மையை விளைவிப்பதற்காகத் தேவனே தீமையை உருவாக்கினார் என்ற தேவ தூஷணமான கருத்தைச் சிலர் நம்புகிறார்கள். ஆனால் தேவன் தாமே இதை உறுதியாக மறுக்கிறார். அவருடைய குணாம்சத்திற்குரிய எல்லா காரியங்களும் இதை நிராகரிக்கின்றன. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் அவராலே உண்டாயிற்று என்றும், அவரிடத்தில் யாதொரு மாறுதலோ வேற்றுமையோ இல்லை என்றும் அவர் தாமே அறிவிக்கிறார். "அவர் கிரியை உத்தமமானது *(perfect)*" (உபா. *32:4*). மற்றவர்களோ பின்வரும் கருத்தை நம்புகிறார்கள்: தேவனுக்கும் சாத்தானுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தரப்பாரும் அவர்களால் முடிந்தவரை மற்றொரு தரப்பாரின் மேல் ஜெயங்கொள்ள பிரயாசப்படுகிறார்கள். ஆனால் தீமையும் சாத்தானும் உலகத்தில் மேலோங்கி இருக்கின்றன. ஆகையால் இவ்வுலகம் "இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகம்" என்று அழைக்கப்படுகிறது. அதில் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை."

*14.* அவர்களுடைய கருத்து என்னவாக இருந்தாலும், சுவிசேஷ யுக அறுவடை காலம் வரை மட்டுமே அவைகள் குழப்பமாக இருந்தன. சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் இந்த விஷயத்தைப் பற்றிய உண்மையான வெளிச்சம் பிரகாசிப்பிக்கப்படத் தொடங்கினது. அது பின்பு வரும் கருத்துகளைத் தெளிவாகக் காண்பித்தது: உலகத்தில் பாவம் பிரவேசித்த போது தேவன் மனுகுலத்தைக் கைவிட்டார். அவர்கள் தங்களுடைய போக்கிலே செல்ல அனுமதித்தார். தெய்வீக அதிகாரத்தின் கோலை விட்டுவிட்டு, தேவன் ஓய்ந்திருந்து, பாவமும் தீமையும் செழிக்க அனுமதித்தார். சர்ப்பத்தினால் அடையாளப்படுத்தப்படுகிற பாவமும் தீமையும் நித்தியத்திற்கும் செழிப்பது தேவனுடைய நோக்கமல்ல. ஏற்ற காலத்தில் மேசியாவின் மூலம் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பதும், பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பை பிடித்து, அதின் வல்லமையை மேசியா அடக்குவார் என்பதும் தேவனுடைய முழு திட்டமாக இருந்தது. அவர் அதை முன் குறித்தும் முன்னறிவித்தும் இருந்தார். மேலும் தீமையான சூழ்நிலைகளோடு தொடர்புடைய எல்லா தீமையையும் அழித்து, இறுதியாக அந்த சூழ்நிலைகளைத் தெய்வீக அதிகாரத்திற்கும் பிரமாணத்திற்கும் திரும்பக் கீழ்ப்படுத்தி அவைகளோடு இசைவிணக்கத்திற்குக் கொண்டு வருவார் என்றும் காண்பிக்கிறார்.

*15.* ஆகையால் இந்த போதனையே அந்த சாட்சியின் "குரல்" அல்லது சான்றாகும். ஆரோன் கோலைத் தரையிலே போட்ட போது, அது சர்ப்பமாகி, அவர் அதைத் திரும்பக் கையிலே எடுத்துக் கொள்வதின் மூலம் அது அடையாளப்படுத்தப்படுகிறது. அடையாளமான சாட்சியை விட நிறைவேறுதலான போதனை என்னே மாட்சிமையானதாக இருக்கிறது! என்னே உறுதியானதாக இருக்கிறது! இந்த சாட்சியைக் கேட்ட உண்மையான இஸ்ரயேலர்களில் யாரேனும் ஒருவன், தேவனுடைய ஜனங்கள் எல்லாரும் சாத்தான், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் வல்லமையிலிருந்து விரைவாக விடுவிக்கப்பட போகிறார்கள் என்பதைக் குறித்துச் சந்தேகப்படக் கூடுமோ?

*16.* நாங்கள் எந்த தனி நபரையும் குறிப்பிடாமல், இந்த சாட்சி ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவது சத்தியத்திற்கும் உண்மையான இஸ்ரயேலர்களுக்கும் நலமானதாகும் என்று நம்புகிறோம். "சீயோன்ஸ் வாட்ச் டவர் அண்ட் எரால்ட் ஆஃப் கிறைஸ்ட் பிரசன்ஸ்" *(Zion's Watch Tower and Herald of Christ's Presence)* என்ற பத்திரிக்கை *1879*-ம் வருடத்தில் வெளியிடப்படத் தொடங்கினது. அதின் "குரல்" தேவனுடைய உண்மையான இஸ்ரயேலுக்கு உலகத்தை விடுவிப்பவராக நம்முடைய கர்த்தர் இரண்டாம் வந்திருத்தலில் ஏற்கனவே வந்திருக்கிறார் என்பதை அறிவித்தது. அவர் ஒரு ஆவி ஜீவியாக மனுஷர் காணக் கூடாத விதத்தில் வந்திருக்கிறார். அவருடைய சபை வகுப்பாரும் கூட "மறுரூபமாக்கப்பட்டு", முதலாம் உயிர்த்தெழுதலில் அவருக்கு ஒப்பானவர்களாக ஆக்கப்படும் வரை அவரைக் காண முடியாது. அவர் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காகவும், தம்முடைய பரிசுத்தவான்களை விடுவிப்பதற்காகவும், அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களான தவித்துக் கொண்டிருக்கிற சிருஷ்டியைச் சீர்கேட்டிலிருந்து விடுவிப்பதற்காகவும் அவர் வந்திருக்கிறார் என்றும் இந்த செய்தி மேலும் அறிவித்தது. இந்த பத்திரிக்கை வெளியிடத் தொடங்கினதற்குச் சிறிது காலத்திலேயே *"Food for Thinking Christians--Why Evil Was Permitted"* (சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்குரிய ஆகாரம் -


OLD THEOLOGY QUARTERLY.

THE

Divine Plan of the Ages


FOR

HUMAN SALVATION.

WHY EVIL WAS PERMITTED.

Showing the Harmonious Co-operation of the Creator's Justice, Wisdom, Love and Power.

BIBLE STUDENTS' TRACTS.


FOOD FOR THINKING CHRISTIANS.

WHY EVIL WAS PERMITTED AND KINDRED TOPICS.

"To make all see, what is the fellowship of the mystery, which from the beginning of the world hath been hid in God." "Wherein he hath abounded toward us in all wisdom and prudence; having made known unto us the mystery of his will, according to his good pleasure which he hath purposed in himself:—that in the dispensation of the fullness of times, he might gather together in one, all things in Christ." Eph. i, 8, and iii, 4, 5, 9.

FREE SUPPLEMENT TO "ZION'S WATCH TOWER," PITTSBURGH, PA. 1881.

தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது) என்ற பெயருடைய விசேஷித்த பத்திரிக்கை வெளியிடப்பட்டது. இது வெளியிடப்பட்ட பிறகு அதே தலைப்பில் மற்ற இரண்டு கைப்பிரதிகளும் வெளியிடப்பட்டன: No. 62, "The Divine Plan of the Ages: Why Evil was Permitted" (யுகங்களைப் பற்றிய தேவ எற்பாடு - தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது); No. 52, "Food for Thinking Christians: Our Lord's Return," (சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்குரிய ஆகாரம் – நமது கர்த்தரின் வந்திருத்தல்) etc.

*17.* இந்த குரல் அல்லது சாட்சி இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் மத்தியில் பரப்பப்பட்டது. 1907-ம் வருடத்திற்குள் 15 லட்சத்திற்கு மேலான பிரதிகள் அமெரிக்காவிலும் கனடாவிலும் பிரிட்டனிலும் விநியோகிக்கப்பட்டது. முதலாம் சாட்சியின் இந்த "குரல்" அல்லது சான்று (இந்த போதனை) இந்நாள் வரை உலகமெங்கும் உள்ள கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில் பரப்பப்பட்டுக்கொண்டு வருகிறது. இப்பொழுது அது பல்வேறு மொழிகளில் விநியோகிக்கப்பட்டுக்கொண்டும் வருகிறது.


*18.* நாங்கள் அறிந்தவரை இந்த கைப்பிரதியில் தான் முதல் முறையாகப் பின்வரும் போதனைகள் அறிவிக்கப்பட்டன: உலகத்திலுள்ள தீமையும், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனமும், அநீதியின் ஆட்சியும், தவித்துக் கொண்டிருக்கிற சிருஷ்டி முழுவதையும் துன்புறுத்துகிற பல்வேறு ஒடுக்குதல்களும், 1) தேவன் தாமாகவே தம்முடைய அதிகாரத்தை (கோல்) விட்டுவிட்டதின் விளைவுகளாக இருக்கின்றன, 2) தேவன் தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்ட இயலாதவராக இருப்பதினால் உண்டானவைகள் அல்ல, அல்லது 3) அவர் தம்முடைய அதிகாரத்தைச் செயல்படுத்தினதால் உண்டான தீமையான விளைவுகளும் அல்ல. மேலும் கர்த்தர் தம்முடைய மகத்துவமான வல்லமையைத் திரும்ப எடுத்துக் கொண்டு ஆளுகை செய்யும் போது, தீமை முழுவதுமாகக் கட்டப்பட்டு, முற்றிலும் நிர்மூலமாக்கப்படும் என்றும் அந்த கைப்பிரதி காண்பித்தது.

*19.* மோசே மற்றும் ஆரோன் கோலின் மூலமும் சர்ப்பத்தின் மூலமும் இஸ்ரயேலர்களுக்குக் கொடுத்த இந்த அடையாளத்திற்கு இதை விட மேன்மையான அல்லது மாட்சிமையான நிறைவேறுதல் இருக்கக் கூடுமா? மற்ற இயற்கையான அடையாளங்கள் அல்லது அதிசயங்கள் அல்லது அற்புதங்களைக் காட்டிலும் இந்த விஷயத்தைப் பற்றிய சத்தியமே இக்காலத்தின் ஆவிக்குரிய இஸ்ரயேலனுக்கு அதிக உறுதியான சான்றாக இருக்கிறதல்லவா? யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டைக் குறித்தும், அதின் நோக்கத்தைக் குறித்தும், அதின் விளைவைக் குறித்தும் கர்த்தருடைய ஜனங்களுக்கு இக்காலத்தில் அளிக்கப்படுகிற அறிவானது, வேறெந்த காரியமும் செய்யாத அளவிற்கு நம்முடைய ஆவல்களைத் திருப்தி செய்து, விடுதலை சமீபமாயிருக்கிறது என்ற நிச்சயத்தை நம்முடைய இருதயத்திற்கு அளிக்கிறதல்லவா?

## இரண்டாம் அடையாளத்தின் குரல்

*20.* இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இரண்டாம் அடையாளமானது, வெண்குஷ்டம் பிடித்த கையைப் பற்றியதாக இருந்தது. அந்தக் கையை மடியிலே மறைத்து வெளியே எடுக்கும் போது வெண்குஷ்டம் பிடித்ததாக இருந்தது. ஆனால் அதைத் திரும்ப மறைத்து இரண்டாம் முறை வெளிப்படுத்தும்போது அது குணமடைந்திருந்தது. சுபாவ இஸ்ரயேலர்கள் அதை ஒரு இயற்கையான அடையாளமாக மட்டுமே உணர்ந்தார்கள். ஆனால் ஆவிக்குரிய இஸ்ரயேலனானவன் இதிலிருந்து இன்னும் ஒரு மேன்மையான பாடத்தைக் கண்டுணர வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. இந்த மேன்மையான பாடத்தினால் கொடுக்கப்படும் சாட்சியானது, அடையாளமான சான்று அடையாளமான இஸ்ரயேலனை நம்பச் செய்ததைவிட ஆவிக்குரிய இஸ்ரயேலனை இன்னும் அதிகமாக நம்பச் செய்யும்.

*21.* கை என்பது வல்லமையின் அடையாளமாகும். இந்த நிகழ்வில் அந்த கரம் தெய்வீக



0

MILLENNIAL DAWN.

"THE PATH OF THE JUST IS AS THE SHINING LIGHT, WHICH SHINETH MORE AND MORE UNTO THE PERFECT DAY."

VOLUME I.

The Plan of the Ages.

470th THOUSAND.

A VINDICATION OF THE DIVINE CHARACTER AND GOVERNMENT: SHOWING, BY A RECOGNITION AND HARMONIZING OF ALL THE SCRIPTURES, THAT THE PERMISSION OF EVIL, PAST AND PRESENT, IS EDUCATIONAL AND PREPARATORY TO THE USHERING OF MANKIND INTO

THE GOLDEN AGE OF PROPHECY

IN WHICH ALL THE FAMILIES OF THE EARTH WILL BE BLESSED WITH A FULL KNOWLEDGE OF GOD AND A FULL OPPORTUNITY FOR ATTAINING EVERLASTING LIFE THROUGH THE REDEEMER, WHO THEN WILL BE THE GREAT RESTORER AND LIFE-GIVER.—ACTS 3:19–21.

1886.

TOWER PUBLISHING CO.,

ALLEGHENY PA.,

U. S. A.

வல்லமையை அடையாளப்படுத்தினது. குஷ்டரோகம் என்பது பாவத்தின் ஒரு அடையாளமாகும். இந்த போதனையின் பொருள் இவ்வாறாயிருக்கிறது: தெய்வீக வல்லமையானது முதல் முறை எவ்வித பாவமோ அபூரணமோ கறையோ இல்லாமல் வெளிப்பட்டது. அதே தெய்வீக வல்லமை இரண்டாம் முறையாக, கொஞ்சங் காலம் மறைக்கப்பட்ட பிறகு பாவத்திலும் அபூரணத் திலும் வெளிப்பட்டது. அதே தெய்வீக வல்லமை மூன்றாம் முறையாகக், கொஞ்சங் காலம் மறுபடியும் மறைக்கப்பட்ட பிறகு பாவமில்லாமல் வெளிப்படுத்தப் படும்.

*22.* இந்த போதனை அல்லது சாட்சி என்ன? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: இந்த போதனை யானது தீமை அனுமதிக்கப்படுவதைக் குறித்து அதற்கு முன் கொடுக்கப்பட்ட போதனைக்கு இணக்கமாக இருக்கிறது. ஆனால் இது பொதுவாகத் தீமை சம்பந் தப்பட்டதாக இல்லாமல், குறிப்பாகப் பாவம் சம்பந்தப் பட்டதாக இருக்கிறது. மேலும் அது பொதுவாக உலகத்தாருக்குப் பொருந்தாமல், விசேஷமாகத் தேவ னுடைய ஜனங்களுக்கு பொருந்தும். அதாவது இவ்வுலகத்தில் தேவனுடைய செயலியக்கிகளாக அல் லது பிரதிநிதிகளாக, அதாவது அவருடைய கையாக அல்லது வல்லமையாகத் தேவன் உபயோகிப்பவர்களுக்கு விசேஷமாகப் பொருந்தும்.

*23.* ஆதியில் தேவனுடைய வல்லமை எவ்வித கறையுமில்லாமல் (*கர்த்தராகிய யெஷுஆவில் E Vol 11 pg 55*) வெளிப்பட்டது. ஆனால் சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய வல்லமையானது, தேவனுக்குப் பிரதிஷ்டை செய்த ஜனங்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்டிருந்தது. அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதி களாகவும் பிரதிநிதிகளாகவும் இருந்தார்கள். சுவிசேஷ யுகத்தில் அவர்கள் கிறிஸ்துவுக்குள் பூரணர்களாகக் கருதப்பட்டிருந்தாலும் உண்மையில் அவர்கள் அபூரணர் களாக, வெண்குஷ்டமுடையவர்களாக இருந்தார்கள். உலகம் அவர்களைக் கறையுள்ளவர்களாகக் காண்கிறது. ஆனால் தெய்வீக கண்ணோட்டத்தில் இருந்து அவர் களுடைய கறைகளெல்லாம் கிறிஸ்துவின் நீதியின் புண்ணியத்தினால் மூடப்பட்டு மறைக்கப்பட்டிருந்தன. இருந்தாலும் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக அவர்கள் உலகத்தில் தேவனுடைய கையாக அல்லது வல்லமையாக இருந்தார்கள். அவர்கள் படிப்படியாகத் தேவனுடைய மடிக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு முதலாம் உயிர்த்தெழுதலில் "மறுரூபமானார்கள்". ஆகையால் வருங்காலத்தில் திரும்ப வெளிப்படும் போது பாவ மில்லாதவர்களாகக் "கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாதவர்களாக" இருப்பார்கள். மேலும் கர்த்தர் தம்முடைய கோலை நீட்டி, எகிப்தின் மேல் வாதைகளைக் கொண்டு வந்து, மற்ற தேவ ஜனங்களைப் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக் கும்போது, அவர்கள் மறுபடியும் கர்த்தருடைய செயலியக்கிகளாக உபயோகிக்கப்படுவார்கள்.

*24.* இந்த போதனையும் கூட சுவிசேஷ யுக அறுவடை காலத்திற்குரிய விசேஷித்த சான்றாக அல்லது சாட்சியாக இருக்கிறதா? இந்த விஷயம் அதற்கு முன் ஒருபோதும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படாம லிருந்ததா? ஆம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அது சுவிசேஷ யுக அறுவடை காலத்திற்குரிய விசேஷித்த போதனையாக இருந்தது. அதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு தெளிவாகப் புரிந்து கொள்ளப்படாதிருந்தது. கடந்த காலத்தில் பலர் நியாயமாகுதலைக் குறித்து சில காரியங்களையும், பரிசுத்தமாகுதலைக் குறித்து சில காரியங்களையும், வரவிருக்கும் விடுதலையாளரைப் பற்றிய சில காரியங்களையும் புரிந்து கொண்டார்கள். ஆனால் சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் இந்த விஷயங்கள் தெளிவான வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட்டதைப் போல் அதற்கு முன் ஒருபோதும் புரிந்து கொள்ளப்பட்டதில்லை. அவைகள் ஒவ்வொன் றிற்குமுள்ள தொடர்பு சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. நியாயமாகுதலுக்கும், பரிசுத்தமாகுதலுக்கும், விடுதலை யாகுதலுக்கும் இடையிலுள்ள பின்வரும் தொடர்பு அதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டதில்லை: *(1)* நியாயமாகுதல் என்பது தெய்வீக கிருபையினாலானது, அது விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது, *(2)* பரிசுத்தமாகுதல் என்பது நியாயமாகுதலின் அடிப்படையில் செய்யப்படுகிற கிரியைகளையும் பலியையும் அர்த்தப்படுத்தும், *(3)* இவ் வாறு நியாயமாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்தவர்கள், கிறிஸ்துவுக்குள் தேவன் அளிக்கிற கிருபையினால் விசுவாச உண்மைத்துவத்துடன் ஜெயங் கொண்டால், முதலாம் உயிர்த்தெழுதலில் தெய்வீக தன்மையின் "கனம் மகிமை சாவாமை"யில் பங்கு கொள்வார்கள்.

*25.* முதலாம் குரல் அல்லது சாட்சி ஒரு விசே ஷித்த வழியின் மூலம் அறிவிக்கப்பட்டதைப் போல் இந்த சாட்சியின் குரல் அல்லது சான்றும் ஏதேனுமொரு விசேஷித்த வழியில் அறிவிக்கப்பட்டதா? ஆம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம்: "மில்லினியல் டான்" *(Millen nial Dawn)*என்ற புத்தகங்களின் தொகுப்பில் அது

அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதின் முதலாம் வால்யூம் 1886 -ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகங் களின் ஒன்றிணைக்கப்பட்ட சான்றானது சபை வகுப்பார் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. அது ஆதியில் செய்யப் பட்ட பாவத்தையும், அந்தப் பாவத்திலிருந்து வெளி யேறுவதற்கான முதல் படியாகக் கிறிஸ்துவில் விசுவாசத் தின் மூலம் நியாயமாக்கப்படுவதையும், இரண்டாம் படியாகிய பரிசுத்தமாகுதல் மற்றும் பலியையும், இறுதி யாக முதலாம் உயிர்த்தெழுதலில் தெய்வீக தன்மைக்கும், மகிமைக்கும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரவாளிகளாக இருக்கும் நிலைக்கும் மாற்றப்படுவதையும் காண்பிக் கிறது. இந்த பரூஷியா வால்யூம்ஸ் இந்த விஷயத்தை பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து ஆராய்கின்றன. சபை வகுப்பார் சுத்திகரிக்கப்படுவதற்குக் காரணமாகிய நம்முடைய கர்த்தரின் மீட்கும்பலிக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு எங்கும் போதிக்கப்படுகிறது. மேலும் சபை வகுப்பாரின் "மறுரூபமாக்கப்படுதலில்" கர்த்தர் அவர்களை தம்மிடம் எடுத்துக் கொள்ளும் வரை அவர்களில் முழுமையான தூய்மையை எதிர்பார்க்க முடியாது என்ற உண்மையும் அந்த புத்தகங்களில் போதிக்கப்படுகிறது.

26. இந்த விஷயத்தைக் குறித்துப் பரூஷியா வால்யூம்களில் கொடுக்கப்பட்ட போதனைக்குக் கூடுத லாகவும், அவைகளுடைய "குரலை" வலியுறுத்துவதற் காகவும், அவைகளுடைய சாட்சியைத் தெளிவாக்குவதற் காகவும் சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் பில்கிரீம் ஊழியமும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த ஊழியத்தில் பல சகோதரர்கள் ஒவ்வொரு இடமாகப் பிரயாணம் செய்து, வெண்குஷ்டம் பிடித்த கையின் மூலமும் அது குணமாகுவதின் மூலமும் போதிக்கப்பட்ட பாடத்தை மற்றவர்களுக்கு விளக்கி காண்பித்தார்கள். இந்த புத்தகங்களை வாசித்த அனைவரும் அநுதினமும் அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்.

## மூன்றாம் அடையாளத்தின் குரல்

27. மற்றொரு அடையாளமும் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. முதலில் கொடுக்கப்பட்ட இரண்டு சாட்சிகளின் "குரலுக்குத்" தேவனுடைய உண்மையான ஜனங்களில் சிலர் செவி சாய்க்க மாட் டார்கள் என்றும், அதினாலே மற்றொரு அடையாளமும் தேவையாக இருக்கும் என்றும் கர்த்தர் தெளிவாகக் காண்பிக்கிறார். சுபாவ இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப் பட்ட மூன்றாம் அடையாளமானது நதியின் தண்ணீரை மொண்டு, நிலத்தில் ஊற்றுவதாக இருந்தது. நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே ரத்தமாயிற்று. சுபாவ இஸ்ரயேலர்கள் அந்த அடையாளத்தை, அந்த அற்புதத்தை மட்டுமே கண்டார்கள். அவர்கள் அதின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. ஆவிக்குரிய இஸ்ரயேலனானவன் அதைப் புரிந்து கொள்ள நாட வேண்டும்.

28. இந்த அடையாளத்தின் உருவகமான போதனையின் விளக்கமாக, நாங்கள் பின்வரும் காரியத்தை எடுத்துரைக்கிறோம்: (1) இங்கே தண்ணீர் என்பது மற்ற இடங்களிலிருப்பதைப் போலவே சத்தியத் திற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது, (2) நிலம் என்பது மற்ற இடங்களிலிருப்பதைப் போலவே சமுதாயத்தின் ஒரு அடையாளமாக இருக்கிறது, (3) நிலத்தின் மேல் தண்ணீர் ஊற்றப்படுவதென்பது பொதுவாகப் பூமிக்குப் புத்துணர்ச்சி அளிப்பதை, ஒரு ஆசீர்வாதத்தை அர்த்தப் படுத்தும். மேலும் சமுதாயத்தின் மேல் சத்தியம் ஊற்றப் படுவதென்பது பொதுவாக அந்த சமுதாயத்திற்கு ஒரு ஆசீர்வாதத்தை அர்த்தப்படுத்தும் என்று நாம் எதிர் பார்ப்போம். ஆனால் இந்த அடையாளத்தில் தண்ணீர் ரத்தமாக மாறினது. ரத்தமென்பது வெறுப்பையும் அருவருப்பையும் உண்டாக்கும். சிந்தப்பட்ட ரத்தம் மரணத்தையும் அடையாளப்படுத்தும்.நிஜ நிறைவேறு தலில் இது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: இக்காலத்தில் சமுதாயத்தின் மேல் சத்தியம் ஊற்றப்படும் போது, நாம் பொதுவாக எதிர்பார்க்கும் விளைவுக்கு நேரெதிரான விளைவையே உண்டாக்கும். நாகரீகமான சமுதாயம் கடந்த சில நூற்றாண்டுகளாகச் சத்தியத்தைப் பெற ஆர்வமாகத் தேடுகிறதென்று அவர்கள் கோரு கிறார்கள். ஆனால் தாங்கள் சத்தியத்தைத் தேடுகிறவர்கள் என்று வெளிப்படையாக அறிக்கை பண்ணுகிறவர்கள் (சைன்ஸ் –science- என்ற வார்த்தையின் அர்த்தமே சத்தியமென்பதாகும்) சத்தியத்தை நிராகரித்து அதை வெறுக்கும் காலம் வந்திருக்கிறதென்று இந்த அடை யாளம் காண்பிக்கிறது. அவர்களுக்குச் சத்தியம் அருவருப்பானதாகவும் வெறுப்பூட்டுகிறதாகவும் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் தோன்றும்.

29. இக்காலத்தைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளை வாசகர்கள் நினைவு கூருவார்களாக. "சூரியன் இருளாகவும் சந்திரன் ரத்தமாக வும் மாறும்" (யோயே. 2:31). இதின் அர்த்தத்தையும் நாங்கள் ஏற்கனவே காண்பித்திருக்கிறோம்: சந்திரன் யூத நியாயப்பிரமாணத்தையும், சூரியன் சுவிசேஷ செய்தியை யும் அடையாளப்படுத்தும். மனுஷர் பெருமை பாராட்டு கிற இந்தக் காலத்தில் "வேதாகமத்தை இலக்கியமாகக் கருதி விமர்சிப்பது"(Higher criticism), "பரிணாமக் கொள்கை" (Evolution) போன்ற தவறான கொள்கை களினால், பொது சமுதாயத்தின் கண்களுக்குச் சுவிசேஷ செய்தியினால் இருளடையும். மேலும் அவர்கள் சந்திர னால் அடையாளப்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தை ரத்தத்தால் நிறைந்தவைகளாக கருதுவார்கள். அதாவது நியாயப்பிரமாணத்தின் பலிகளை அடையாளங்களாகக் கருதி, அவைகளை மதித்துணருவதற்குப் பதிலாக, அவை கள் தவறாக நடத்தப்பட்ட யூதர்களின் செயல்களாகக் கருதப்படும். யூதர்கள் அறியாமையினாலும் மூட நம்பிக்கையினாலும் ஆயிரக்கணக்கான மிருகங்களைக் கொன்று போட்டார்கள் என்றும், யூதர்கள் கீழ்ப்படிந்த கட்டளைகள் தேவனால் கொடுக்கப்பட்டவைகளாக இல்லாமல், அவர்களுடைய சொந்தக் கற்பனையாகவும் அவர்களுடைய ஆசாரியர்களின் தந்திரங்களாகவும் இருக் கின்றன என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. சத்திய மென்னும் தண்ணீர் சமுதாயம் என்னும் நிலத்தின் மேல் ஊற்றப்படுவதின் சான்று அல்லது சாட்சியில், இதே கருத்து அடங்கியுள்ளது. சத்தியமானது சத்தியமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக, ரத்தத்தால் நிறைந்ததாக வெறுக்கப்படும்.

30. சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் உண்மை யான இஸ்ரயேலர்களுக்கு ஒரு சான்றாக அல்லது சாட்சி யாக இதற்கிணையாகக் கருதப்படக் கூடிய ஏதேனு மொரு காரியம் உலகத்தில் கொடுக்கப்பட்டிருந்ததா? அது இதுவரை ஒருபோதும் கொடுக்கப்படாத சான்றாக இருந்ததா? ஆமென்று நாங்கள் பதிலளிக்கிறோம்.

*சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு இயக்கம் நடைபெற்றது. அந்தக் காலத்தில் வாட்ச் டவர் பைபிள் அண்ட் டிராக்ட் சொசைட்டி (Watch Tower Bible and Tract Society) கைப்பிரதிகளை இலவசமாக விநியோகித்தது. அவைகளை ஞானமாக உபயோகிக்க வாக்குக் கொடுத்த அனைவருக்கும் அவர்களுக்குத் தேவைப்பட்ட எண்ணிக்கையில் எவ்வித தடையுமின்றி கொடுக்கப்பட்டது. வாட்ச் டவர் பத்திரிக்கையின் வருடாந்தர விவர அறிக்கையை நாம் படிக்கும் போது இவ்வித பிரதிகள் பல லட்சக்கணக்கில் அக்காலத்தில் விநியோகிக்கப்பட்டிருந்ததை நாம் காண்போம். இவ்வாறாகச் சத்தியம் உருவகமான நிலமாகிய சமுதாயத்தில் ஊற்றப்பட்டுக் கொண்டு வந்தது. அநேக நாடுகளில் பல மொழிகளில் தாராளமாக ஊற்றப்பட்டது. "தன்னார்வ ஊழியம்" (Volunteer work) என்று அழைக்கப்பட்டிருந்த ஊழியத்தின் மூலம் 1898-ம் வருடத்திலிருந்து சத்தியமென்னும் தண்ணீர் இவ்வாறு ஊற்றப்படுவது விசேஷமாகவும் அற்புதமாகவும் முன்னேறியது. அந்த ஊழியத்தின் கீழ் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்த ஜனங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் ஒழுங்கு முறையாகவும் ஏற்ற காலத்தில் தொடர்ச்சியாகக் கிறிஸ்தவ ஜனங்களுக்குக் கைப்பிரதிகளையும் சிறு புத்தகங்களையும் விநியோகம் செய்தார்கள். அவைகளை வாட்ச் டவர் சொசைட்டி இலவசமாகக் கொடுத்தது. அதற்குத் தேவையான செலவின் பணம் எவ்வித வற்புறுத்தலோ வேண்டுகோளோ இல்லாமல் நன்கொடையாகக் கிடைத்ததாக இருந்தது.*

*31. தாங்கள் சத்தியத்தைத் தேடுகிறவர்களென்று வெளிப்படையாக அறிக்கை பண்ணுகிற மிகுந்த அறிவாற்றலுள்ள உலக ஜனங்களின் மேல் இந்த தண்ணீர் ஊற்றப்படுவதின் விளைவு என்னவாக இருக்கிறது? அது சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்டு, மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? மிக சிலர் மட்டுமே அதை ஏற்றுக் கொள்கிறார்கள். பெரும்பான்மையோர் அதைக் கண்டு சினங் கொள்கிறார்கள். முதலாம் வருகையின் காலத்தில் கர்த்தரும் அப்போஸ்தலர்களும் எவ்வித பணத்தையோ கிரயத்தையோ பெற்றுக் கொள்ளாமல் ஜனங்களுக்குப் போதிப்பதைக் கண்டு வேதபாரகர்களும், பரிசேயரும், வேத சாஸ்திரிகளும் சினமடைந்ததைப் போலவே, இக்காலத்திலும் நடக்கிறது (அப். 4:2). தாங்கள் கிறிஸ்தவ மண்டலத்தின் போதகர்களென்று வெளிப்படையாக அறிக்கை பண்ணுகிறவர்கள் தங்களுக்கே சத்தியம் போதிக்கப்படுவதை விரும்புவதில்லை, தங்களுடைய ஜனங்களுக்குப் போதிக்கப்படுவதையும் விரும்பவில்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. அவர்கள் அதை வன்மையாக எதிர்த்து, சத்தியத்தைப் போதிப்பதின் மூலம் நன்மை செய்ய நாடுகிறவர்களை துன்புறுத்தித் தூஷிக்கிறார்கள்.*

*32. கிறிஸ்தவ மண்டலத்தின் போதகர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் எளிமையை விட்டுவிட்டு, பரிணாமக் கொள்கை, வேதாகமத்தை இலக்கியமாகக் கருதி விமர்சிப்பது, மதப்பிரிவின் பெருமை, உலகத்தனம் ஆகியவற்றை அதிகமதிகமாக நாடுவதால் அவர்களுக்குச் சத்தியம் அருவருப்பாகவும் விரும்பத்தகாததாகவும் ரத்தத்தால் நிறைந்ததாகவும் தோன்றுகிறது. அவர்கள் அடையாளமான பலிகளை இரத்தம் நிறைந்தவைகளாகக் கருதுவது மட்டுமல்ல, பாவங்களின் நிமித்தம் செலுத்தப்பட்ட நிஜ நிறைவேறுதலான பலி கிறிஸ்துவின் மரணமாக இருந்தது என்ற கருத்தையும் வெறுக்கிறார்கள். தெய்வீக நீதி இந்த பலியை கோருகிறது என்ற கருத்தையும், ரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது என்று அப்போஸ்தலர் சொன்ன அறிக்கையையும் (எபி. 9:22) அவர்கள் வெறுக்கிறார்கள். ஏனென்றால் அது அவர்களுடைய தத்துவங்களுக்கு முரண்பாடாக இருக்கிறது.*

*33. அவர்களுடைய தத்துவங்களின்படி மனுஷன் குரங்குக்கு அடுத்த நிலையில் சிருஷ்டிக்கப்பட்டான் என்றும், அது முதல் இந்நாள் வரையிலும் மனுகுலம் மேன்மையாக வளர்ந்து கொண்டு வருகிறது என்றும், மனுஷன் தேவனுக்கு ஒப்பாக ஆகும் வரை தொடர்ந்து வளர்ந்து அபிவிருத்தி அடைந்து கொண்டிருப்பான் என்றும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் காரியங்களின் தற்கால நிலையிலிருந்து மனிதனை விடுவிப்பதற்கு இரட்சகரோ விடுதலையாளரோ அவசியமில்லை என்றும், மனுஷனைத் தனித்து விட்டாலே அவன் வளர்ந்து கொண்டிருப்பான் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் இக்கால சூழ்நிலைகளைத் தீமை என்று எண்ணவில்லை. அவர்கள் நன்மையைத் தீமை என்றும், தீமையை நன்மை என்றும், வெளிச்சத்தை இருள் என்றும், இருளை வெளிச்சம் என்றும் சொல்லுகிறார்கள் (ஏசா. 5:20). மனுஷனுடைய வீழ்ச்சி, மீட்கும் பலி, வரவிருக்கும் விடுதலை, மில்லினிய யுகத்தில் பூமியின் எல்லா ஜாதிகளுக்காகவும் கிறிஸ்துவில் தேவன் ஏற்பாடு செய்திருக்கிற "இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின்" ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பற்றிய தேவ வார்த்தையின் சத்தியம் அவர்களுக்கு ஒவ்வாததாகவும், அவர்களுடைய தத்துவங்களுக்கு முரண்பாடானதாகவும், வெறுக்கத்தக்கதாகவும், இரத்தம் நிறைந்ததாகவும் இருக்கிறது.*

*34. அடையாளத்தில் மூன்றாம் அடையாளம் அல்லது சாட்சியின் "குரல்" உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் விசுவாச உறுதியைக் கொண்டு வந்ததைப் போலவே, நிஜ நிறைவேறுதலிலும் இந்த கடைசி சாட்சி அல்லது சான்று இக்காலத்தில் உலகத்திலுள்ள கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் அனைவருக்கும் இறுதியாக விசுவாச உறுதியைக் கொண்டு வரும். அவர்கள் நம்பி இருந்த ஸ்தாபனங்களும் மத சாஸ்திரிகளும் கிறிஸ்து யெஷுஆகுள்ளிருக்கிற சத்தியமாகிய உண்மையான சுவிசேஷத்தை மதித்துணருவதைப் படிப்படியாக விட்டுவிட்டு உலகத்தாரின் "புறம்பான இருளுக்குள்" செல்கிறார்கள் என்று அவர்கள் உணருவார்கள். கர்த்தரிடத்தில் உண்மைத்துவமாயிருக்கிற அனைவரும், காரியங்களின் இந்த நிலையை உணரும்போதும், வேதாகம கண்ணோட்டத்திலிருந்து விசுவாசத்திற்கும் அவிசுவாசத்திற்கும் இடையிலுள்ள பிளவை கண்டு கொள்ளும் போதும், சத்தியத்திற்காக உறுதியாய் நிலை நிற்க கர்த்தரிடமிருந்து உதவி பெற்று, விசுவாச உறுதி அடைந்து, சத்தியத்திற்காக நிற்கும் திராணியை அடைவார்கள்.*

*35. மோசேயும் ஆரோனும் பார்வோனுக்கு முன் நின்ற போது இந்த அடையாளங்களில் முதலாம் அடையாளத்தைச் செய்தார்கள் என்பதை நினைவு கூருவோம். கோல் சர்ப்பமாக மாறி, திரும்ப எடுக்கப்படும் போது கோலாக மாறினது. பார்வோன் அவனுடைய சூனியக்காரரை அழைப்பித்து (இந்த சூனியக்காரர்கள் இந்தக் காலத்தின் துர்ப்புத்தியுள்ளவர்களையும், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்களையும்*

அடையாளப்படுத்துகிறார்கள் - 2தீமோ. 3:8), தெய்வீக வல்லமை மற்றும் தயவின் ஒரு நிரூபணமாக மோசேயும் ஆரோனும் செய்த இந்த அடையாளத்தை அவர்களுக்கு விளக்கி, அதே நிரூபணங்களைக் கொடுக்க அவர்களால் கூடுமா என்று அவர்களிடம் கேட்டான். அவர்களால் கூடுமென்று அவர்கள் பதிலளித்தார்கள். அவர்கள் தங்கள் கோல்களைத் தரையிலே போட்ட போது அந்த கோல்களும் சர்ப்பங்களாயின. ஆரோனுடைய "கோல் - சர்ப்பம்" அவைகள் எல்லாவற்றையும் விழுங்கிற்று.

*36.* இது எதை அர்த்தப்படுத்தும்? உலகத்தாரைப் பொருத்தவரை எபிரெயர்களை நம்ப செய்த முதலாம் அடையாளம் அல்லது சான்று புதிதானது அல்ல என்று அவர்கள் எண்ணுவார்கள். தீமையான காரியங்களி லிருந்து நன்மை விளைவிக்கும்படிக்குத் தேவன் தீமையான காரியங்களை ஆசீர்வதிப்பார் என்று மத சாஸ்திரிகள் எப்போதுமே அறிவித்துக் கொண்டும் எண்ணிக் கொண்டும் இருக்கிறார்கள் என்று உலகத்தார் கோருவார்கள். ஆனால் சுவிசேஷ யுக அறுவடையில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு இந்த விஷயத்தைக் குறித்துக் கொடுத்த வெளிப்பாடானது இன்னும் எவ்வளவு முழுமையானதாக இருக்கிறதென்றால், கடந்த காலத்தில் கொடுக்கப்பட்ட இந்த ஆலோசனைகள் மற்றும் தத்துவங்கள் எல்லாவற்றையும் விழுங்கிப் போடும் அளவிற்காகும். கர்த்தர் சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் அவருடைய ஜனங்களுக்குப் பின்வரும் உண்மையைத் தெளிவாக நிரூபித்தார்: சில தற்செயலான காரியங்களைத் தேவன் நன்மைக்கென்று மாற்றி அமைப் பது மட்டுமல்ல, விரைவில் கர்த்தர் தம்முடைய கரத்தை நீட்டி, பூமியின் காரியங்களைத் தம்முடைய கட்டுப் பாட்டிற்குள் திரும்ப எடுத்துக் கொள்ளும் போது, எல்லா தீமையான சூழ்நிலைகளும் நீக்கப்பட்டு, தெய்வீக குணாம்சத்திற்கும் அதிகாரத்திற்கும் இணக்கமான நிலைமைகள் ஸ்தாபிக்கப்படும். ஏனென்றால் எல்லா வகையான தீமைகளும் தெய்வீக கட்டுப்பாடு நீக்கப் பட்டதின் விளைவாக வந்தவைகளாக இருக்கின்றன.

*37.* எகிப்தியர்களின் மேல் வந்த முதலாம் வாதையில், நதிகளிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாக மாறினது என்பதை நினைவு கூருவோம். எகிப்தியர்கள் அந்தத் தண்ணீரைக் குடிக்கக் கூடாமல் போனதால், குடிக்கத்தக்க தண்ணீருக்காக நதியோரத்தில் ஊற்று களைத் தோண்டினார்கள். தண்ணீர் சத்தியத்தை அடையாளப்படுத்துவதால், இங்கே குறிப்பிடப்பட்ட கருத்து இவ்வாறாயிருக்கிறது: உலகத்தாரின் கண்ணோட் டத்திலிருந்து விரைவாகச் சத்தியமெல்லாம் அருவருக் கத்தக்கதாக ஆகிவிடும். தேவ வார்த்தையில் கொடுக் கப்பட்டிருக்கிற தெய்வீக ஏற்பாடு சம்பந்தப்பட்ட ஒவ் வொரு அம்சமும் அவர்களுக்கு வெறுக்கத்தக்கதாக இருக்கும். அவர்கள் ஊற்றுகளைத் தோண்டுவதென்பது, உலகத்தார் (கிறிஸ்தவ மண்டலம் - சபையின் படிநிலை அமைப்பு) தேவ வார்த்தையைப் புறக்கணித்து, அவர் களுடைய சொந்த வழிகளில் சத்தியத்தைத் தேடுவார்கள் என்பதை அர்த்தப்படுத்தும்.

## இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்?

*38.* சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் மாம்சத் திலுள்ள ராஜரீக ஆசாரிய கூட்டத்தாரைச் சேர்ந்த கர்த்த ருடைய ஜனங்கள், கோதுமையிலிருந்து களைகளை, அதாவது தேவனுடைய ஜனங்களிலிருந்து மற்றவர் களைப் பிரிக்க வேண்டுமென்று, தேவன் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத், தேவனால் பல வழிகளில் உபயோகிக்கப்பட்டார்கள் என்பது, அடை- யாளத்தில் இவ்வளவு தெளிவாகக் குறிப்பிடப்பட்டதைக் காணும்போது, அது நம் அனைவரையும் உற்சாகப்படுத்த வேண்டும். இந்த சாட்சிகளை விநியோகிப்பதில் பிரதிஷ்டை செய்தவர்களைத் தவிர மற்ற எவர்களும் வெற்றியடையவில்லை என்பது கவனிக்கத்தக்க உண்மை யாக இருக்கிறது. அக்காலத்தில் விநியோகிக்கப்பட்ட முதலாம் பரூஷியா வால்யூமின் பல லட்சக்கணக்கான பிரதிகளில் பெரும்பான்மையானவைகள், அவைகளி லுள்ள சாட்சியை விசுவாசிக்கிறவர்களால் விநியோகிக் கப்பட்டன என்பதும் கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. மோசேக்கு ஆரோன் வாயாகச் செயல்பட்டதைப் போல், கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பதில் அவருடைய கருவிகளாக மற்றும் வாயாக இருக்க வேண்டுமென்ற விருப்பத்தினால் அவர்கள் அவைகளை விநியோகம் செய்தார்கள்.

*39.* ஆகையால் அன்பான சகோதர சகோதரிகளே இந்த அடையாளத்தை ஆராய்ந்து, நமக்குப் போதனை யாக முன்பு எழுதப்பட்டிருக்கிறவைகளெல்லாம் ஏற்ற காலத்தில் தெளிவாக நிறைவேறினதைக் கண்டு உற்சாக மடைவோமாக. நான் புது பெலனடைந்து, உண்மையான இஸ்ரயேலர்களாக இருக்கக் கூடுமென்று நாம் நம்புகிற அனைவருக்கும், "தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது"? என்ற தெய்வீக திட்டத்தின் ரகசியத்தை அறிவிப் போமாக.

*40.* சுவிசேஷ யுகத்தில் இந்த ஊழியத்திற்காகத் தேவன் உபயோகித்த கையாகிய அவருடைய செயலியக் கிகளைக் குறித்து, மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் வேலையிலும் ஈடுபடுவோமாக. மனுஷனுடைய பார்வை யில் நம்மை மாற்றவில்லையென்றாலும், தேவனுடைய பார்வையில் நம்மை மூடுகிற நியாயமாகுதலையும், பிரதிஷ்டை செய்தவர்களுக்கு அளிக்கப்படும் இறுதி யான வெற்றியையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டு வோமாக. நாம் தேவனுடைய ராஜ்யத்தில், கர்த்தருக்கு ஒப்பானவர்களாகிய அவருடைய ஊழியக்காரர்களாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்க தகுதி பெறும் வரை, பிரதிஷ்டை செய்த இஸ்ரயேலர்களெல்லாம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கும்படிக்கு, அவர் களை உற்சாகப்படுத்துவோமாக.

*41.* மற்றவர்கள் கேட்டாலும் கேட்கவில்லை யென்றாலும் சத்தியமென்னும் தண்ணீரை நாம் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருப்போமாக. இந்த அடையாளமும் இந்த சாட்சியும், அதின் எதிரிடையான விளைவுகளும் கூட இறுதியாக உண்மையான இஸ்ர யேலர்கள் எல்லோரின் மேலும் தாக்கத்தை உண்டு பண்ணுமென்று கர்த்தர் தாமே நிச்சயமளிக்கிறார். உலகத் தார் எதிர்ப்பதும் கூட, விடுதலையாளரும் விடுதலையும் சமீபமாயிருக்கிறதென்று உண்மையான இஸ்ரயேலர்கள் தீர்மானிக்க, அவர்களுக்கு உதவும் சான்றாக இருக்கிறது என்றும் நினைவு கூருவோமாக. இறுதியாக ஆரோன் சம்பந்தமாகவும் மோசே சம்பந்தமாகவும் "நான் உன் னோடே இருப்பேன்" என்று கர்த்தர் மோசேக்குக் கொடுத்த நிச்சயத்தை நமக்கும் பொருத்திக்கொள் வோமாக.

★★★★★★★★★★★★★★★★★★★★★

-ம்



## யாவே உங்கள் முன்னே போவார்; இஸ்ரயேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்

*(ஏசா. 52:12)*

*PT# 601, Jan-Feb 1986, pp. 2,3*

*1.* இவ்வசனம் தேவனுடைய ஜனங்களுக்கு, விசேஷமாகப் பிரதிஷ்டை செய்த ஜனங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமான ஒன்றாகும். அதில் அவர்களுக்கு ஒரு அதிசயமான நிச்சயம் அளிக்கப்படுகிறது. சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் தேவனுடைய ஜனங்கள் முற்காலத்தில் அவர்களுக்கிருந்த விரும்பத்தகாத உறவுகளை விட்டு செல்வதற்கு மிகவும் குறிப்பாகப் பொருந்தும். தேவனுடைய ஜனங்கள் அவ்வித உறவுகளை விட்டு வருவதற்கான வழியைத் தேவன் ஆயத்தம் பண்ணுவார் என்றும், அதற்குப் பிறகு அவர்களுக்கு உண்டாகும் விளைவுகளையும் அவர் பார்த்துக் கொள்வார் என்றும் இவ்வசனம் காண்பிக்கிறது.

*2.* இவ்வசனம் தேவனுடைய ஜனங்களுக்குப் பொதுவாகப் பொருந்துவதாகவும் நாம் புரிந்து கொள்ளக் கூடும். விசேஷமாக இழந்ததைத் திரும்பப் பெறுதலின் காலத்திற்கு முன் பிரதிஷ்டை செய்கிற எல்லோருக்கும் பொருந்தும். நாம் முதலாவதாக இந்தப் பிரயோகத்தை கருத்தில் கொள்வோம். இவ்வசனம் தேவனுடைய ஜனங்களில் தனிநபர்களுக்கும், ஒரு கூட்டமாக அவர்கள் அனைவருக்கும் முற்காலத்தில் பொருந்தினது, இப்பொழுதும் பொருந்துகிறது. தேவனுடைய வழி நடத்துதல்களுக்காகச் சரியாக விழித்திருந்து, அவருக்குக் காத்திருந்து *(சங் 27:14)*, தங்களுக்கு வருகிற ஏதேனுமொரு அனுபவங்களின் தொகுப்பு நிகழும் போதும் அதற்குப்பிறகும் வருகிற விளைவுகளைப் பார்த்துக் கொள்ள அவரிடத்தில் விசுவாச உறுதி வைக்கிற அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்கு, இவ்வசனத்தில் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமான நிச்சயம், எப்போதுமே இருக்கும். இதுவே இவ்வசனத்தைக் கொடுப்பதில் தேவனுடைய நோக்கமாக இருக்கிறது.

*3.* மூப்பரான பாத்திரவான்களின் பல வகையான மற்றும் ஏறுமாறான அனுபவங்கள் எல்லாவற்றிலும் தேவன் அவர்களுக்கு முன்னும் பின்னும் சென்றார். இந்த அனுபவங்களில் சிலவற்றை நாம் எபி.*11* அதிகாரத்தில் வாசிக்கிறோம். அவர் எப்போதுமே அவர்களோடிருந்தார். அவர்களுக்கு முன்பாக வழியைத் திறந்து, அவர்களுக்காக ஆசீர்வாதங்களை ஆயத்தம் செய்து, அவர்களுடைய அனுபவங்களில் தொடர்ந்து அவர்களோடு கூடவே இருந்து, அவர்களுக்கு உண்டான விளைவுகளைக் கவனித்துக் கொண்டு பராமரித்து, சகலமும் அவர்களுடைய உயர்ந்த நன்மைக்கேதுவாக நடக்கும்படி செய்தார் *(ரோம. 8: 28; 1பேது. 5:7)*. தேவனிடத்தில் அவர்கள் வைத்த மேன்மையான விசுவாசத்திற்கும், காரியங்களின் மேல் ஆதிக்கம் செய்து மாற்றி அமைக்கும் தேவனுடைய பரிபாலனங்களுக்கும் இந்த விசுவாச வீரர்கள் நமக்குப் பல வழிகளில் அதிசயமான முன்மாதிரிகளாக இருக்கிறார்கள்.

*4.* யாவே தேவனுடைய யூதயுக அறுவடை காலத்தின் ஜனங்களுடனும் அவர் இருந்தார். யோவான் ஸ்நானனின் ஊழியத்தின் மூலம் அவர் நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவுக்கு முன்னே போனார். நம்முடைய கர்த்தர் நிஜ நிறைவேறுதலான ஒப்புரவாகுதலின் நாளில் காளையாக இருந்தார் என்றும், ஆகையால் *7*-ம் மாதம் *10*-ம் தேதி அன்று, அவர் தம்மைத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் புரிந்து கொள்ள தேவன் அவருக்கு உதவினார். அவர் அவருடைய பொது ஊழியத்தைச் சரியாகத் தொடங்கி சரியாக நிறைவேற்றுவதற்குத் தேவையான போதனைகளை நம்முடைய கர்த்தர் வனாந்தரத்திலிருந்த *40* நாட்களில் தேவன் அவருக்குக் கொடுத்தார். நம்முடைய கர்த்தருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பிதா அவருக்காக வழியை ஆயத்தம் செய்தார். மேலும் அவருடைய மரணத்தில் உச்சநிலையை அடைந்த அவருடைய கடினமான அனுபவங்கள் எல்லாவற்றிலும் தேவன் அவரோடிருந்தார். அந்த அனுபவங்களினால் உண்டான எல்லா விளைவுகளையும் தேவன் கவனித்துப் பராமரித்தார்.

*5.* அப்போஸ்தலர்களும் மற்ற உத்தம இஸ்ரயேலர்களும் யெஷுஆவை ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றும் போதும், தேவன் அவர்களுக்கு முன்னே சென்று, நம்முடைய கர்த்தரின் மரணத்திற்கு முன்பும் பின்பும், பெந்தெகொஸ்தேவுக்குப் பின்பும் யூதர்கள் மற்றும் மற்றவர்களின் எதிர்ப்பினால் அவர்களுக்கு உண்டான கடினமான அனுபவங்களில் தேவன் அவர்களோடே இருந்தார். தேவ ஆவியின் அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வேதாகம பதிவு காண்பிப்பதை போல், அவர்களுக்கு உண்டான விளைவுகள் எல்லாவற்றையும் தேவன் திறமையோடு கவனித்து பார்த்துக் கொண்டார்.

*6.* சுவிசேஷ யுக ஆரம்ப காலத்தில் தேவனற்ற ஜனங்களினால் செய்யப்பட்ட கொடூரமான துன்புறுத்தல்களும் மற்ற அனுபவங்களும் தேவனுடைய ஜனங்களுக்கு வந்த போது, தேவன் அவர்களுக்கு முன்னும் பின்னும் சென்றார். தேவனற்ற ஜனங்களின் ரோம சாம்ராஜ்யமானது, போப்பு மார்க்க ரோம சாம்ராஜ்யமாக மாறின பிறகு, தேவனுடைய உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்கு வந்த நீண்ட கால கொடூரமான துன்புறுத்தல்களின் மத்தியிலும் தேவன் அவர்களுக்கு அவ்வாறே செய்தார். தேவன் (நம்முடைய கர்த்தரின் மூலம்) நட்சத்திர அங்கத்தினர்களுக்காகவும் *(வெளி.1:16,20)* அவர்கள் மத்தியிலிருந்த எட்டு அதிபதிகளுக்காகவும் *(மீகா 5:5 KJV principal men - பிரதான மனுஷர்கள்)* ஆயத்தம் செய்து, அவர்களைத் தாங்கி, அவர்களை வழிநடத்தி, தேவனுடைய ஜனங்களுக்கு உதவி செய்து ஆசீர்வதிப்பதற்காக நட்சத்திர அங்கத்தினர்களை விசேஷமாக உபயோகிப்பதிலும், தேவனுடைய கவனமான அக்கறை பிரத்தியேகமாக வெளிப்படுகிறது.

*7.* தப்பறை உள்ளே நுழைந்து சத்தியத்தை அகற்ற தேவன் அனுமதித்த போதும் கூட, அவர் அவருடைய உண்மையான ஊழியக்காரர்களிடம் தொடர்ந்து விசுவாச உண்மைத்துவத்துடன் செயல்பட்டார். எடுத்துக்காட்டாகத் திரித்துவ தப்பறைக்கு எதிராகச் சத்தியத்தைத் தூக்கிப் பிடிப்பதற்காக ஏரியஸ் *(Arius)* செய்த பெரிய போராட்டத்திலும், உருவ வழிபாட்டை எதிர்த்து டூரின் ஊரைச் சேர்ந்த கிளாடியஸ் *(Claudius of Turin)* மற்றும் அகோபார்ட் *(Agobard)* எடுத்துக் கொண்ட உறுதியான நிலையிலும், திருப்பலி பூஜையில் தன்மை மாற்றம் நடக்கும் என்ற கொள்கைக்கு எதிராகக் கார்பி என்ற ஊரைச் சேர்ந்த ரட்ராம்னஸ் *(Ratramnus of Corbie)* மற்றும் தூர் என்ற ஊரைச் சேர்ந்த பெரங்கர் *(Berangar of Tours)* எடுத்துக் கொண்ட உறுதியான நிலையிலும், சபையின் படிநிலை அமைப்புக்கு எதிராகப் பீட்டர் அபேலார்ட் *(Peter Abelard)*, பிரஸ்கியா ஊரைச் சேர்ந்த அர்னால்ட் *(Arnold of Brescia)* மற்றும் ப்ரூஸ் என்ற ஊரைச் சேர்ந்த பீட்டர் *(Peter of Bruys)* செய்த போராட்டத்திலும் தேவன் தொடர்ந்து அவர்களோடே இருந்தார்.

*8.* சபையும் அரசாங்கமும் பிரிந்திருக்க வேண்டுமென்று மார்சிகிளியோ *(Marsiglio)* உறுதியாக நிலை நின்ற போது தேவன் அவருக்கு ஆதரவாகக் காரியங்களை மாற்றி அமைத்தார். போப்பு மார்க்க அமைப்பு மற்றும் திருப்பலி பூஜையில் தன்மை மாற்றம் என்ற கொள்கைக்கு எதிராகவும் வைக்கிளிஃப் *(Wycliffe)* செய்த போராட்டத்திலும், வேதாகமத்தை மொழி பெயர்த்து விநியோகிப்பதற்கு அவர் செய்த ஊழியத்திலும் தேவன் அவரோடு அவ்வாறே செயல்பட்டார். ஜான் டாலர் *(John Tauler)*, ஜான் ஹஸ் *(Jan Huss)*, சவோனரோலா *(Savonarola)* ஆகியவர்களின் காரியத்திலும்; தேவன் தம்முடைய பரிபாலனத்தை வெளிப்படுத்தினார். சில நட்சத்திர அங்கத்தினர்கள் ரத்த சாட்சிகளாக மரித்து அவர்களுடைய பூமிக்குரிய ஓட்டத்தை முடிக்க தேவன் அனுமதித்தார். ஆனால் அதிலும் கூட அவர்களை துன்புறுத்தினவர்கள் அவர்களுடைய புதுசிருஷ்டிகளுக்குத் தீங்கு விளைவிக்கவோ, அவர்களுடைய மகிமையான உயிர்த்தெழுதலின் நம்பிக்கைகளைக் குலைக்கவோ தேவன் அனுமதிக்கவில்லை.

*9.* சபையின் பிலதெல்பியா காலகட்டத்திற்கு (மறுமலர்ச்சி காலகட்டத்திற்கு) வரும் போது, அதின் பிரதான நபராகிய ஜான் வெசல் *(Wessel)* மறுமலர்ச்சியின் நான்கு முக்கியமான அடிப்படை கொள்கைகளை உறுதி செய்த போது தேவன் அவரைத் தாங்கினார் என்று நாம் காண்கிறோம். அந்த நான்கு அடிப்படை கொள்கைகளாவன: *(1)* வேதாகமமே விசுவாசம் மற்றும் நடைமுறையின் ஒரே ஊற்றாகவும் விதியாகவும் இருக்கிறது; *(2)* கிறிஸ்துவின் பலி புண்ணியத்தில் விசுவாசம் வைப்பதின் மூலம் மட்டுமே நியாயமாகுதல் உண்டாகும்; *(3)* கிறிஸ்து ஒருவரே சபையின் தலையானவராக இருக்கிறார்; *(4)* உண்மையாகப் பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே ஆசாரியர்களாக இருக்கிறார்கள். போப்பு மார்க்க அமைப்பையும், அதின் பல தப்பறைகளையும், விசேஷமாகக் கிரியைகளினால் நியாயமாகுதல் என்ற தப்பறையையும் லூத்தர் *(Luther)* தைரியமாக எதிர்த்த போது தேவன் எவ்வாறு அவருக்கு முன் சென்றார் என்று நாம் காண்கிறோம். கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு ஞாபகார்த்தமாக இருக்கிறது என்ற சத்தியத்தைச் சுவிங்கிளி *(Zwingli)* தூக்கிப் பிடித்த போதும், பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே சபையாக இருக்கிறார்கள் என்ற சத்தியத்தை ஹூப்மெயேர் *(Hubmaier)* தூக்கிப் பிடித்த போதும், அன்பான ஒரே தேவன் என்ற சத்தியத்தைச் சர்வெட்டஸ் *(Servetus)* போதித்த போதும், சபை அரசாங்க அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்று கிரான்மர் *(Cranmer)* வலியுறுத்தின போதும், தேவனுடைய ஜனங்களுக்கு அவர் வைத்த இலக்கு அன்பாகும் என்ற சத்தியத்தை வெஸ்லி *(Wesley)* சொன்னபோதும், வேதாகமமே கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் கோட்பாட்டின் மையமாக இருக்கிறது என்று தாமஸ் கேம்ப்பல் *(Thomas Campbell)* வலியுறுத்தின போதும், சபையை நிர்வகிப்பதில் மூப்பர்களுக்கு அல்லாமல் சபையின் அங்கத்தினர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற சத்திய - த்தை ராபர்ட் பிரவுன் *(Robert Browne)* வலியுறுத்தின போதும், தேவனுக்கும் பிறனுக்கும் அன்பைச் செலுத்த வேண்டுமென்று ஜார்ஜ் ஃபாக்ஸ் *(George Fox)* போதித்த போதும், இரண்டாம் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசன கால கணக்கை மில்லர் *(Miller)* அறிவித்த போதும் தேவன் அவர்களோடே கூட நின்றார். அதற்குப்பிறகு *1846*-ம் வருடத்திற்கும், சுத்திகரிக்கப்பட்ட வாசஸ்தலத்தின் தொடக்கத்திற்கும் நாம் வரும்போதும் ஸ்டோர்ஸ் *(Storrs)* மற்றும் ஸ்டெட்சன் *(Stetson)* போன்ற மற்றவர்களின் பெயர்களையும் நாம் நினைவு கூருகிறோம்.

## பரூஷியா மற்றும் எபிப்பெனி காலத்தில் தேவன் காண்பித்த கவனமான அக்கறை

*10.* தேவன் அவருடைய பரூஷியா கால ஜனங்களுக்குத் தேவையான காலத்திற்குரிய சத்தியத்தைக் கொடுத்து தம்முடைய கவனமான அக்கறையுடன் அவர்களை வழிநடத்தி அவர்களுக்குப் பின் சென்றார். நம்முடைய கர்த்தரின் திரும்ப வருதலின் நோக்கம் மற்றும் விதம் என்ற காரியத்தைக் குறித்தும், மற்ற காரியங்களைக் குறித்தும், பாஸ்டர் ரஸல் அதிக சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளும்படிக்குத் தேவன் வழியை ஆயத்தம் செய்தார். நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகையில் அவர் மனித கண்களுக்குப் புலப்படாத ஒரு ஆவி ஜீவியாக இருப்பாரென்றும், காற்றைப் போல் வந்து போகும் திறமையுள்ள ஒருவராயிருப்பாரென்றும் புரிந்து கொள்ளும்படி தேவன் அவருக்குக் கிருபை செய்தார்.

இவ்வாறாக நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலும், தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் அறுவடையில் கூட்டிச் சேர்க்கப்படுவதும் 1874-ம் வருடத்திலே தொடங்கி விட்டதென்று தீர்க்கதரிசனத்திலிருந்தும் கால கணக்கிலிருந்தும் புரிந்து கொண்டு அறிவிக்க பாஸ்டர் ரஸலுக்கு வழி திறக்கப்பட்டது. மேலும் 1877-ம் வருடம் முதல் "இதோ மணவாளன்" என்ற செய்தியை அறிவிப்பதற்கும் வழி திறக்கப்பட்டது. ஈடுபலியை மறுதலித்தல், தேவனிடத்தில் உண்மைத்துவமின்மை, கலப்படச் சேர்க்கை, உலக ரீதியான சீர்திருத்தம், முரண்பாடு, மற்றும் புரட்சி (இது எபிப்பெனி காலத்தில் நிகழ்ந்தது) என்ற ஆறு பெரிய கொழித்தல்களின் மத்தியில் தேவன் தம்முடைய ஜனங்களைத் தாங்கினார்.

*11.* 1914-ம் வருடத்தில் உலக மகா யுத்தத்துடன் ஆரம்பித்த எபிப்பெனி காலத்தின் மாற்றப்பட்ட சூழ் நிலைகளிலுள்ள தம்முடைய பிரகாசிப்பிக்கப்பட்ட ஜனங்களுக்காக யாவே தேவன் வழியைத் திறந்து, அவர்களுக்கு உண்டான விளைவுகளை கவனித்துப் பரி பாலித்தார். 1916-ம் வருடத்தில் பாஸ்டர் ரஸலின் மரணத்திற்குப் பிறகு, பரம அழைப்பிற்குள் பிரவேசிப்பதற்கான கதவு 1914-ம் வருடத்திலே மூடப்பட்டதென்று கண்டு கொள்ளவும், அதற்குப்பிறகு செய்யப்பட வேண்டிய முக்கியமான வேலை திரள் கூட்டத்தாரையும் வாலிபரான பாத்திரவான்களையும் ராஜ்யத்தில் அவர்களுக்குரிய இடத்திற்காக அபிவிருத்தி செய்வதாகும் என்பதைக் கண்டு கொள்ளவும் தேவன் பாஸ்டர் பால் S L ஜான்சனை வழி நடத்தினார். 1954-ம் வருடத்தில் எபிப்பெனி படிப்படியாக முடிவடையத் தொடங்கி பெஸிலியா அதின் முதல் கட்டத்தில் தொடங்கும் போதும் கூட தேவனுடைய மாற்றி அமைக்கும் பரிபாலனம் மிகத் தெளிவாக இருந்தது. நிஜ நிறைவேறுதலான எபிப்பெனி பிராகாரம் மற்றும் பாளயத்தின் அபிவிருத்தி சம்பந்தப் பட்ட கூடுதலான சத்தியத்தைத் தேவன் பாஸ்டர் ஜாலிக்கு அதிகமாகக் கொடுத்தார். 1979-ம் வருடத்தில் பாஸ்டர் ஜாலியின் மரணத்திற்குப் பிறகும் கூட தேவன் எவ்வாறு அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்கு வழிகாட்டி அவர்களை நடத்தி, அவர்களுக்கு உண்டான விளைவுகளைக் கவனித்துப் பரிபாலித்தார் என்பதற்கு நாம் சாட்சிகளாக இருக்கிறோம்.

*12.* நிஜநிறைவேறுதலான மேக அக்கினி ஸ்தம்பமாகிய சத்தியம் மற்றும் அதின் ஆவியின் மூலமும், தேவனுடைய பரிபாலனங்களின் மூலமும், அவருடைய உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்கு, நிஜ நிறைவேறுதலான கானானில் "இனி வரவிருக்கிற இளைப்பாறுதலை" (எபி. 4:9) அவர்கள் அடையும் வரை, அவர்களுடைய பிரயாணம் முழுவதிலும் தேவன் அவர்களை வழிநடத்தினார். நல்ல மேய்ப்பராகிய நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் ஊழியத்தின் மூலம், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு முன் சென்று (யோவா. 10:4) புல்லுள்ள இடங்களுக்கும் அமர்ந்த தண்ணீர்கள் அண்டைக்கும் அவர்களை வழி நடத்தினார் (சங். 23:2). உருவகமான ஓநாய்களோ தீங்கு விளைவிக்கிற மற்ற வைகளோ மந்தைக்குத் தீங்கு விளைவித்து அழிக்காதபடிக்கு தேவன் அவர்களுக்குப் பின் சென்றும் அவர்களைப் பாதுகாத்தார். பின்வரும் பாடலின் வரிகள் அவருடைய உண்மையான சுவிசேஷ யுக ஜனங்களுக்கு, ஒரு கூட்டமாகவும் தனி நபர்களாகவும், உண்மையாக இருக்கின்றனவென்று நாம் சொல்லலாம்:

*வல்லமையுள்ள சத்துருக்களின் திரளான சேனைகள் கூடி*
*தேவனுடைய ஜனங்கள் ராஜ்யத்தை நோக்கி செய்யும்*
*பிரயாணத்தைத் தடுத்தாலும்,*
*தேவன் தமது ஜனங்களோடிருந்து பாதுகாப்பாக வழி*
*நடத்துவார்*
*ஆஹா, அவருடைய அன்பான இரக்கம் என்னே*
*வல்லமையுள்ளது!*
*இருளான மேகத்தைப் போன்ற உபத்திரவம்*
*என்னை அடர்த்தியாகச் சூழ்ந்து இடி சத்தமாக*
*முழங்கினாலும்*
*அவர் எப்போதுமே என் ஆத்துமாவுக்கு அருகே*
*உறுதியாக நின்றார்.*
*ஆஹா, அவருடைய அன்பான இரக்கம் என்னே*
*நன்மையானது!*

*13.* நாம் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லும் போது அவர் தொடர்ந்து நம்மை வழி நடத்துவார் என்றும், அவருடைய மாற்றி அமைக்கும் பரிபாலனம் நம்மோடிருக்கும் என்றும், நமக்கு உண்டாகும் விளைவுகள் எல்லாவற்றையும் அவர் கவனித்துப் பார்த்துக் கொள்வார் என்றும் நாம் நிச்சயமாக இருக்கக் கூடும். ஆம் அவர் விசுவாச உண்மைத்துவமுள்ளவராகவும் மாறாதவராகவும் இருக்கிறார். ஆகையால் நாம் அவர் மேல் வைக்கும் விசுவாசத்தின் முழு நிச்சயத்துடன் தொடர்ந்து முன்னேறுவோமாக.

## பாபிலோனை விட்டு வெளியேறுவது சம்பந்தமாக இவ்வசனத்தின் பிரயோகம்

*14.* ஏசா. 52:11-ம் வசனம் காண்பிப்பதைப் போல், ஏசா. 52:12-ம் வசனத்தின் குறிப்பான பிரயோகம் சுவிசேஷ யுக அறுவடை காலத்தில் தேவனுடைய ஜனங்கள் முற்காலத்தில் அவர்களுக்கிருந்த விரும்பத்தகாத உறவுகளை விட்டு வருவதற்குப் பொருந்தும்.விசேஷமாக வெளி.18:2-4 மற்றும் எரே.51:6-9 வரையுள்ள வசனங்களில் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் பாபிலோனாகிய பெயர் சபையை விட்டு வருவதற்குப் பொருந்தும்: "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்"; "நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார்." 1878-ம் வருடத்திலிருந்து தேவன் கொடுத்த இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய ஜனங்கள் கத்தோலிக்க சபையையோ புரட்டஸ்டண்ட் மதப்பிரிவுகளையோ விட்டு வெளியேறும் போது தேவன் அவர்களுக்கு முன் செல்கிறார் என்றும் அவர்களோடு இருக்கிறார் என்றும், அவர்கள் அந்த அமைப்புகளை விட்டு வந்ததினால் உண்டான விளைவுகளை அவர் கவனித்துப் பார்த்துக் கொள்கிறார் என்றும் அவர்கள் ஆசீர்வாதமான நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

*15.* பெயர்சபை என்னும் பெரிய பாபிலோனுக்குக் கூடுதலாகப், பாஸ்டர் ரஸலின் மரணத்திற்குப் பிறகு சிறிய பாபிலோன் என்னும் அமைப்பும் உண்டா

னது. அந்த சிறிய பாபிலோனில், "யெகோவா சாட்சிகளின்" வாட்ச் டவர் அமைப்பும் அதின் நிர்வாக குழுவும் ரோமன் கத்தோலிக்க சபைக்கு இணையாக இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க சபை கொடுத்த கொடிய தடை ஆணைகளும், அவர்கள் "வேத புரட்டர்களை" நடத்தின விதமும், வாட்ச் டவர் அமைப்பை எதிர்த்தவர்களை அவர்கள் ஐக்கியத்திலிருந்து விலக்கி கொடியதாக நடத்தினதற்கு இணையாக இருக்கிறது. மற்ற சில சத்திய பிரிவுகள் செய்த காரியங்கள் மதப்பிரிவு பற்றுடைய புரட்டஸ்டண்ட் சபை அமைப்புகள் செய்த காரியங்களுக்கு இணையாக இருக்கின்றன.

*16.* தாங்கள் அடிமைத்தனத்திலிருக்கிறார்கள் என்பதைச் சத்திய செய்தியின் மூலம் புரிந்து கொள்கிற அனைவரும், உடனடியாக ஏசா. 52:11-ம் வசனத்தின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, அதிலிருந்து வெளியேறி கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருக்க நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம் (கலா. 5:1). கர்த்தராகிய யெஷுஆ சொன்னதைப் போல், "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவா.8:31,32,36). பெரிய பாபிலோனையோ சிறிய பாபிலோனிலுள்ள வாட்ச் டவர் அமைப்பையோ மற்ற எந்த அமைப்பையோ விட்டு வருவதைக் குறித்து எந்த ஒருவனும் பயப்படாதிருப்பானாக. ஏனென்றால் தேவன் யெஷுஆவின் உண்மையான சீஷர்களுக்கு முன் சென்று, அவர்களுக்காக வழியைத் திறந்து, தொடர்ந்து அவர்களோடு கூட இருந்து, அவர்களுக்கு உண்டான விளைவுகளை எல்லாம் கவனித்துப் பார்த்துக் கொள்வார். ராணுவத்தின் உருவகத்தை உபயோகித்து, தேவன் படைக்கு முன்னும் பின்னும் இருந்து, நம்முடைய நலன்களை பார்த்துக் கொள்வார் என்று நமக்கு வாக்குத்தத்தம் செய்கிறார். தேவன் விசுவாச உண்மைத்துவமுள்ளவர் என்றும், மாறாதவர் என்றும் நாம் உறுதிகொண்டு, அவர் மீது வைக்கும் விசுவாசத்தின் முழு நிச்சயத்தோடு நிலை நிற்போமாக.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## *சங்கீதம் 82:6,7 வசனங்களின் அர்த்தமென்ன?*

***BSQB pp.494-496***

*1.* "நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்து போவீர்கள்."

*2.* இந்த வேத வசனங்களைப் புரிந்துகொள்வதற்கு நாம் முதலில் இவ்வசனங்களின் சூழ்நிலை அமைப்பையும் நம்முடைய கர்த்தர் இவ்வசனங்களைப் பிரயோகிப்பதின் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். சங்.82-ம் அதிகாரமானது, சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தில், நம்முடைய கர்த்தரின் பரூஷியா அல்லது வந்திருத்தலில், அவர் தேவனால் நியமிக்கப்பட்ட விடுதலையாளரும், கிறிஸ்தவ மண்டலத்தின் நியாயாதிபதியாகவும் இருப்பதைக் குறிப்பிடுகிறது என்பது வெளிப்படையாயிருக்கிறது.

*3.* சங். 82:1-ம் வசனத்தில் தேவன் என்றும், சங் 82:6-ம் வசனத்தில் தேவர்கள் என்றும் மொழி பெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தை "ஏலோயீம்" (elohim) என்பதாகும். இந்த வார்த்தை யாவே தேவனை மட்டுமல்ல, மற்றவர்களையும் குறிக்க உபயோகிக்கப்படுகிறது. வேதாகமத்தில் இந்த வார்த்தை பின்வரும் நபர்களையும் குறிக்க உபயோகிக்கப்படுகிறது: (1) நியாயாதிபதிகள் மற்றும் அதிபதிகள் (யாத். 21:6; 22:8, 9, 28; 1 சாமு. 2:25); (2) நியாயாதிபதிகளாகவோ அதிபதிகளாகவோ இல்லாத மற்ற வல்லமையுள்ள நபர்கள் (ஆதி. 23:6; யாத். 7:1); (3) நல்ல மற்றும் பொல்லாத தேவ தூதர்கள் (சங். 8:5 வசனத்தை எபி. 2:7 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; சங். 97:7-ம் வசனத்தை எபி.1:6-ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்); கர்த்தராகிய யெஷுஆ (சங் 45:6; இவ்வசனத்தை 45:7-ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். 7-ம் வசனம் யாவே தேவனைக் குறிக்கிறது. ஆகையால் 6-ம் வசனத்திலுள்ள தேவன் என்பது கர்த்தராகிய யெஷுஆவைக் குறிக்கிறது).

*4.* சங்.82:1-4 தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்; தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார். எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச் செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள். (சேலா.) ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ் செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்.

*5.* இவ்வாறாக சங். 82:1-ம் வசனத்தில் நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ "தேவ சபையிலே (congreg - ation of the mighty KJV பார்க்கவும், வல்லவர்களின் சபை - அரசியல் ரீதியான, நிதி ரீதியான, மதரீதியான, முதலாளி வர்க்கம் சார்ந்த, தொழிலாளி வர்க்கம் சார்ந்த மற்றும் சமுதாய ரீதியான, வல்லவர்களின் கூட்டம்) எழுந்தருளி இருக்கிறார் (நிற்கிறார்- standeth KJV பார்க்கவும்); தேவர்களின் (ஏலோயீம் - பூமியின் வல்லவர்கள்) நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்". இந்த பூமிக்குரிய பிரபுக்கள் அநியாயமாகத் தீர்ப்பு செய்ததற்காகவும், துன்மார்க்கர்களுக்குச் சலுகை அளித்ததற்காகவும் கர்த்தராகிய யெஷுஆ அவர்களைக் கடிந்து கொள்கிறார். அவர்கள் ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ் செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்து, அவர்களை நேர்மையற்று நடத்துபவர்களிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவர் அவர்களுக்குப் புத்திமதி சொல்கிறார்.

*6.* சங்.82:5 அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது. ஆனால் சங். 82:5-ம் வசனத்தின் படி பூமியின் இந்த வல்லவர்கள் (பூமியின் ஏலோயீம்) "அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள் [சகல ஜனங்களும் பாரபட்சமின்றி சரிசமமாக நடத்தப்பட வேண்டுமென்று கர்த்தர் கொடுக்கிற அழைப்புக்கு அவர்கள் செவி சாய்ப்பதில்லை - இதுவே நிஜ நிறைவேறுதலான யூபிலி எக்காளம், கடைசி எக்காளமாகிய ஏழாம் எக்காளம் மற்றும் தேவ எக்காளத்தின் சத்தமாக இருக்கிறது (சக. 9:14; 1 கொரி. 15:52; வெளி. 11:15; 1 தெச. 4:16) - தேவ எக்காளத்தைப் பற்றிய விளக்கத்திற்காக P. Vol. 2, பக். 147-149 பார்க்கவும்], அந்தகாரத்

திலே நடக்கிறார்கள் (அவர்களுடைய கொள்கைகளின் விளைவு சம்பந்தமாக அந்தகாரத்திலே நடக்கிறார்கள்); (அதின் விளைவாக) தேசத்தின் (மானிட சமுதாயத்தின்) அஸ்திபாரங்களெல்லாம் (நீதி மற்றும் ஒழுக்கம் சம்பந்தமாக இதுவரை நிலைநாட்டப்பட்டிருந்த கொள்கைகள்) அசைகிறது. [இந்தக் கொள்கைகள் சமச்சீர் அற்றவைகளாகவும், குழப்பமானவைகளாகவும் முறைக்கேடாகக் கையாளப்படுபவைகளாகவும் ஒன்று மற்றொன்றோடு இணக்கமில்லாதவைகளாகவும் இருப்பதால், அவைகள் அகற்றப்பட வேண்டும். புதிய சமுதாய அமைப்பாகிய புதிய வானத்திற்கும் பூமிக்கும் வழி வகுக்கும்படிக்கு அவைகள் அழிந்து போக வேண்டும் (2பேது. 3:10-13)]."

*7. சங்.82:6,7* <u>நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்து போவீர்கள்.</u> அதற்குப்பிறகு சங்.82:6,7-ம் வசனங்களில் கர்த்தராகிய யெஷுஆ வல்லவர்களாயிருக்கிற அவருடைய பரிசுத்தவான்களிடம் அவருடைய "சிறு மந்தையிடம்" (லூக். 12:32) பேசுகிறார்: "நீங்கள் [தேவ வசனத்தைப் பெற்றுக் கொண்டவர்களை (எவர்களுக்காகத் தேவ வசனம் கொடுக்கப்பட்டதோ அவர்களை). தேவர்கள் என்று அவர் அழைக்கிறார்- யோவா. 10:35] தேவர்கள் என்றும் (ஏலோயீம் -வல்லமையுள்ளவர்கள் - ஏனென்றால் யெஷுஆ அவர்களுக்குக் கொடுத்த தேவ வார்த்தையையும், அந்த வார்த்தையின் ஆவியையும் ஏற்றுக் கொண்டார்கள்) நீங்கள் எல்லாரும் உன்னதமானவரின் மக்கள் (பிள்ளைகள் KJV பார்க்கவும்) என்றும் (பிரியமானவர்களே, இப்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் - 1யோவா. 3:2; 2பேது. 1:4) நான் சொல்லி இருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போல் செத்து லோகப் பிரபுக்களில் ஒருவனைப் போல் விழுந்து போவீர்கள் (இவர்கள் ஆதாம் என்னும் பிரபுவின் பிள்ளைகளாக, அவருடைய தண்டனையில் பங்கு கொள்கிற பொது உலகத்தாரைப் போல் மரிப்பதில்லை, மாறாகப் பிரபுவாகிய யெஷுஆவுடனும் (ஏசா. 9:6; அப். 3 :15; 5:31), அவருக்கு ஒப்பாகவும் பலி செய்து மரிப்பார்கள்; ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் எல்லாரும் சரீர ரீதியாக மரிப்பார்கள் என்றும் இவ்வசனம் நிரூபிக்கிறது - மனுஷரைப் போல் செத்து)."

*8. சங். 82:8* <u>தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்; நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்.</u> கிறிஸ்து வகுப்பாரின் பலி முடிவடைந்த பிறகு அவர்கள் பின்வரும் காரியத்தைச் செய்ய அழைக்கப்படுகிறார்கள் (சங் 82:8). "தேவனே (ஏலோயீம் - வல்லவர்) எழுந்தருளும். பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும் (சாத்தானுடைய சாம்ராஜ்யத்தின் அழிவை முழுமையாக்கி, சகல பரிசுத்த தீர்க்கதரிசிகளின் மூலம் நீண்ட காலமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட 'இழந்ததை திரும்பக் கொடுத்தலின் காலங்களைத்' தொடங்கி வையும் – அப். 3:19-23; சங். 96,98); நீரே "சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர் (சங். 2:7-12)". அப்போது "பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினாலே நிறைந்திருக்கும்" (எண். 14:21). "பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர் (சங். 22:27, 28).

★★★★★★★★★★★★★★★★★★★★★

**கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்,**
**அதைக் கட்டுகிறவர்களின்**
**பிரயாசம் விருதா;**
**கர்த்தர் நகரத்தைக் காவாராகில்**
**காவலாளர் விழித்திருக்கிறது விருதா.**
*சங். 127:1*



***உங்கள் கவனத்திற்கு***
சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

## பெங்களூரு கன்வென்ஷன்

கர்த்தருக்குச் சித்தமானால்
"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"
சகோதர ஐக்கியக் கூட்டம் , பெங்களூரில்
ஆகஸ்ட் மாதம் 21, 22 & 23 தேதிகளில்
(வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.
"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"


**புது உடன்படிக்கை**
*Monthly newsletter published by*
*the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*

# நமது கர்த்தரின் மரணத்தின் வருடாந்திர ஞாபகார்த்தம் - 2026
## ஆசரித்தவர்களின் விவரம்

மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தை சேர்ந்த எக்லிஷீயா மூப்பர்களிடமிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் பெற்ற விவரத்தின்படி, கீழ்கண்ட சகோதர, சகோதரிகள் நமது கர்த்தருடைய மரண ஞாபகார்த்தத்தை அவரது அன்பின் கட்டளையின்படி, குறித்த நேரத்தில் நிசான் மாதம் 14 ஆம் நாள், அதாவது இந்த வருடம் மார்ச் மாதம், 31-ஆம் தேதி மாலை 6 மணிக்குப் பின்பு தேவ கிருபையினால் ஆசரித்தனர்.

**கோயம்புத்தூர்**
Br.சேவியர்அந்தோணிசாமி
Br.பால்ராஜ்
Sr.ராணி சுப்பிரமணியன்
Sr.ஷீலா ராஜு
Br.Y.ராஜு
Br.ரஸல் வைகிளி.்.ப்
Br. ரேனஸ் வால்டோ

**சென்னை (திரு.வி.க.நகர்)**
Br. S.சபேஷ்குமார்
Sr. S.அகிலா
Sr. E.ரேவதி
Sr. E.அன்புமணி
Sr.R.ஹேமாவதி
Sr.R.சுபா
Sr.R.விஜயலட்சுமி
Sr.ஜோஸ்லின் லியா
Br.சிரில் ∴பெர்ணண்டஸ்
Br.M.N.டேவிட்
Br.GP.யோயேல்
Sr. J.ஜென்சி
Sr.மஹாலட்சுமி
Sr.காவியா
Sr.அருணா தேவி

**சென்னை (திருவள்ளூர்)**
Br.P.புரட்சிமணி
Sr.பிரபாவதி
Sr.பிரிஸில்லா
Br.R.ரவிக்குமார்
Sr.R.சுகந்தி ரவிக்குமார்
Br.R.பிரவீன் குமார்
Br.R.பிரேம் குமார்
Sr.குணபூஷணம்
Sr.A.குமுதினி
Sr.ஜெயமங்களம்
Br.இராமானுஜம்
Sr.எலிசபெத் ஆனந்தன்
Sr.ரேஷ்மா ஆனந்தன்
Sr. பேபி தெப்போராள்

**மும்பை**
Br.பிரகாஷ் சர்மா
Sr.ருக்மணி சர்மா
Sr.மெரினா சங்கர்
Br.அனிரூத்
Br.ஷியாம்

**பெங்களூர்**
Br.தமிழரசன்
Br.நிதிஷ் ஜோஷ்வா
Br.கார்த்திக்
Sr.வேல்விழி தமிழரசன்
Sr.அனுராதா
Sr.ரம்யா
Sr.பூர்ணிமா
Sr.பாக்யா
Sr.கேத்தரின்
Sr.லாவன்யா
Sr.மேரி ஜுலியட்
Sr.பார்கவி
Sr.பிரியா ரெபெக்கா
Br.ஆனந்த்மெல்லம்
Br.செல்வராஜ்
Sr.மஹேஸ்வரி
Br.இருதயராஜ்

**திருச்சி -கல்லக்குடி**
Br.பன்னீர் செல்வம்
Sr.மரியா
Sr.மெர்லின்
Sr.ஹெப்சிபா
Sr.பப்பி
Sr.செலின்

**திருச்சி**
Sr.கேத்தரின் மரியா
Br.இராயப்பன்
Br.D.L.மகிலன்
Sr.எஸ்தர் ராணி

**சேத்தியா தோப்பு**
Br.அந்தோணிசாமி

**முதலியார்பேட்-புதுச்சேரி**
Sr.திவ்யா ராணி

**சேலம்**
Br.பீட்டர்
Sr.கிரேஸி
Br.சேகர்
Sr.சிரோன்மணி

**புதுச்சேரி**
Br.ஜுலியன்
Sr.லூர்துமரி
Sr.மேரி ஜாக்குலின்
Sr.சாந்திசரோஜா
Sr.கிரேஸி மார்ஷீயல்
Sr.ரெபெக்கா
Sr.லிடியா
Sr.நான்சி
Br.ஜில்பெர்ட்
Sr.ஜெசிந்தா ஜில்பெர்ட்
Sr.கரோலின் ஜில்பெர்ட
Sr.எஸ்தரின்
Sr.கிறிஸ்டினா
Br.லாரன்ஸ் குணசீலன்
Br.கில்ஸ் லாரன்ஸ்
Sr.குளோரியா குணசீலன்
Sr.செசிலியா
Br.மகிமை தாஸ்
Br.ஆபிரகாம் பெலிக்ஸ்
Sr.வினோலியா
Sr.மோத்தி சிப்போராள்
Br.ஆரோக்கியநாதன்பெனார்
Sr.கமலா
Br.A.ஜோஷ்வா பெனார்
Br.A.திலோன் பெனார்
Br.A.சிபியோன் பெனார்
Br.தீபக்பாரதி
Sr.எர்ணஸ்டின் பாரதி
Sr.ஹிமாபிந்து தீபக்
Sr.அனிகா சாரா
Sr.ரீட்டா அந்துவான்
Sr.கிளமந்தைன் மார்த்தாள்
Sr.பிரிஸில்லா
Br.தம்பிதுரை
Sr.செல்வம் நிமாரோசா

Br.அலெக்ஸ் தாசன்
Sr.சுகாசினி
Br.ஆனந்த நம்பியார்
Br.ஜான் மார்க்
Br.எட்வின்
Br.கில்பர்ட் லாரன்ஸ்
Sr.சுகிதா

**கோவா**
Sr.ஜெஸிரேச்சல்

**Naples, Florida, USA**
Sr.ப்ரீட்டி சமீரா
Sr.அத்விகா துக்குதுர்த்தி

**Washington, USA**
Sr.கிரிட்டாமேரி
Sr.கீதா லூர்த்

**Dubai**
Br.கிறிஸ்டோபர் ராஜேஷ்
Sr.ஜுலி கிறிஸ்டோபர்

**Saudi Arabia**
Sr.நகோமி ஜென்ஸி

**Germany**
Sr.பெட்டினா

**London**
Sr.சங்கீதா
Sr.கிருத்திகா

**France**
Br.தம்பிராஜா
Br.எட்வர்ட் லூயிஸ்
Br.தீமோத்தேயு
Sr.செல்வம் இமாகுலேட்
Sr.பெபேயாள்
Sr.ரெபெக்கா
Sr.கேத்தரின்
Sr.மரிஸ்டெல்லா
Sr.ஞானப்பூ

நமது கர்த்தரின் மரண ஞாபகார்த்தத்தை ஆசரித்ததினால் உண்டான ஆசீர்வாதங்கள் நம்மோடுகூட இருந்து இந்த வருட முழுவதும் நமது பிரதிஷ்டையை பெலப்படுத்துவதாக. மேலும் தேவனுடைய கிருபையால் இந்த வருடம் நமது கர்த்தருடைய ஞாபகார்த்தத்தை ஆசரித்து, அதனை, உடன் ஓடிக்கொண்டிருக்கும் விசுவாச வீட்டாருக்கு ஊக்கமூட்டும் வகையில் தெரிவித்து பகிர்ந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் என்றென்றும் நிலைத்திருப்பதாக.

பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும், அவரது குமாரனும் நமது கர்த்தருமாகிய யெஷுஆ கிறிஸ்துவிடமிருந்தும் வருகிற கி ருபையும், இரக்கமும், சமாதானமும் எப்பொழுதும் நம்மோடிருந்து நம்மை வழி நடத்துவதாக. 2யோவான்.3

**“என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்”**

